Koviloor Digital Library

வித்யாசங்கர் ஸ்தபதியின் சிற்ப மொழி

தேனுகா



AC·NO: 268
ND

Koviloor Digital Library

மணிவாசகர் பதிப்பகம்

Koviloor Digital Library

268
6-5

வித்யாசங்கர் ஸ்தபதியின் சிற்பமொழி

கோவிலூர் ஆதீனம்
ACC. NO: 268
தேனுகா
ND
கோவிலூர்-630 307

மெய்யப்பன் அறக்கட்டளை

மணிவாசகர் பதிப்பகம்
55, லிங்கி தெரு, சென்னை-600 001

Koviloor Digital Library

முதல் பதிப்பு
டிசம்பர், 1989

கூச்சல், குழப்பம், ஆரவாரம், அநீதி போன்ற
இக்காலத்தின் தன்மையை அதன் மலிச்சங்களிலிருந்து
பெயர்த்தெடுத்து திசைமாற்றியும், கலை, நியதி,
முழுமை, உண்மை சார்ந்த தன் தேடலில்
தன்னைச் சார்ந்தோரையும் இட்டுச் செல்லும்,
அதியற்புத தொழிற் சங்கத் தலைவர்

திரு. எஸ்.பி. இராமன் எனும்

திரு. சுவாமிநாதன் பரசுராமன் அவர்களுக்கு
இந்நூல்...

(C) உரிமைச்செறிவு. **55, லிங்கித்தெரு, சென்னை - 600 001, மணிவாசகர் பதிப்பகத்**தினரால் வெளியிடப்படுகிறது. அச்சகம். **கே.பி.டி. இண்டஸ்ட்ரீஸ்,** அண்ணாமலை நகர், சிதம்பரம். விலை ரூபாய். **25-00.**

Koviloor Digital Library

விநாயகர்
கோட்டோவியம்
1988



Koviloor Digital Library

தமிழகம் ஒரு கலைச் சோலை

டாக்டர் ச. மெய்யப்பன்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

தமிழ்நாடு ஒரு கலைச்சோலை. காலந்தோறும் கவின்கலைகள் மலர்ந்து நாட்டையும் மக்களையும் மொழியையும் வளப்படுத்தியுள்ளது. கலைஞர்களின் சிந்தனைச் செழுமையால் நுண்கலைகள் வானுற வளர்ந்து ஓங்கியுள்ளன. ஊர்தோறும் கோவில்கள். கோவில்தோறும் சிற்பங்கள். பல்லாயிரம் சிற்பங்கள் தமிழ் கூறும் நல்லுலகம் எங்கும் பரவிக்கிடக்கின்றன. சிற்பங்கள் பல்லாயிரம் மல்கியிருந்தும் சிற்ப இயல் பற்றிய நூல்கள் மிகச் சிலவே. சிற்ப இயலில் புத்தாக்கம் பற்றிய முதல் நூலை வெளியிடும் பெருமை **மணிவாசகர் பதிப்பகத்**திற்கு அமைகிறது.

புதிய புதிய துறைகளில் நல்ல நூல்களை வெளியிடும் திட்டத்தில் **வித்யாசங்கர் ஸ்தபதியின் சிற்ப மொழி** என்னும் நூல் மலர்கிறது. தொல்பழங்காலத்திலிருந்து வளர்ந்துவரும் இந்தியக் கலைச் செல்வங்களின் அழகமைந்த மரபுகளையும் மறுமலர்ச்சிக் காலத்தில் தோன்றிய புதிய போக்குகளையும் பதிவு செய்ய வேண்டிய பொறுப்புணர்வோடு இந்நூலை வெளிக்கொணர்ந்துள்ளோம்.

கலைஞன் தன் கருத்தை எந்த ஊடுநிலை மூலம் வெளியிடுகிறார்; அவர்தம் கருத்துக்களை ஓவியம்

Koviloor Digital Library

மூலமாகவும், சிற்பம் மூலமாகவும் வெளியிடுகிறார். நுண்கலைத் தேர்ச்சிப் புலவராகிய சிற்பி வித்யா சங்கர் ஸ்தபதி சிற்ப இயலில் ஒப்பாரும் மிக்காருமில்லாத அளவு உயர்ந்துள்ளார். அவருடன் சில மணித்துளிகள் கலந்துரையாடினால், அவரிடம் ஆழ்ந்திருக்கும் கலை உள்ளம் வெளிப்படும். நாட்டுப் புறக்கலைகளில் தேர்ச்சி மிக்கவர். ஊரகக் கலை உணர்வினை ஊட்டி வளர்ப்பவர். கிராமிய வாழ்வின் நாடி நரம்புகளை நன்கறிந்தவராதலால் இவர் படைப்புக்கள் அனைத்திலும் ஊர் மணம் கமழும். புடைப்புச் சிற்பங்கள் வடிப்பதில் தன்னேரில்லாதவர். நுண்ணுணர்வுகள் அமைந்த அருங்கலை வினோதர். சாதனைகள் பல நிகழ்த்தியவர். தேசிய அளவி லும் மாநில அளவிலும் விருதுகள் பல குவித்தவர். நவீன கலைப் பாணிகளில் பல்வகைச் சோதனைகள் செய்து வெற்றி குவித்தவர். இந்திய நவீன அருங் காட்சியகங்களில் இவருடைய படைப்புகள் பரிசினை யும், பாராட்டினையும் பெற்றுள்ளன.

நூற்றாண்டுப் புகழ்மிக்க குடந்தை ஓவியக் கல்லூரியில் சிற்பத்துறையில் சிறந்து விளங்குகிறார் பேராசிரியர். காவிரி பாயும் கழனி நாட்டில் குடந்தை வரலாற்றுப் பெருமை உடையது. வளர் கலையினை வளர்க்கும் வளர்ப்புப்பண்ணை. கலை மலிந்த சோழ நாட்டில் கலைகள் கொலுவிருக்கும் குடந்தையில் கலை நலம் சிறந்த வித்யாசங்கர்

Koviloor Digital Library

கோட்டோவியம்
இந்தியன் இங்க்
1981

Koviloor Digital Library

Koviloor Digital Library

தனது கலைப்பணியை ஆரவாரம் இன்றி அமைதியாக நடத்திவரும் அருங்குணச்செம்மல். இவரது **மழைத் தெய்வம்** எனும் சிற்பம் தமிழ்ப்பல்கலைக் கழக அருங்காட்சியகத்தை அழகு செய்கிறது.

தமிழர்களின் சாதனை மன்றமாகத் திகழும் தமிழ்ப் பல்கலைக்கழகத்தை வடிவமைத்த சிற்பி டாக்டர் வ.ஐ.சுப்பிரமணியம் அவர்கள் அமைத்த முதற்பட்டமளிப்பு விழாவில் நம் சிற்பியின் தந்தை பெருமைமிகு **கௌரிசங்கர் ஸ்தபதி** அவர்கட்கு கௌரவ டி.லிட். பட்டமளித்து சிறப்பித்தார். பல்கலைச் செல்வராகிய கௌரிசங்கர் ஸ்தபதியின் மரபுவழிக் கலைச்செல்வத்தை உரிமையுடன் பெற்று வளர்கலை மரபுகளில் புதுமை படைத்துவரும் வித்யா சங்கர் ஸ்தபதியின் சாதனைகளை இந்நூல் கல்வெட்டாக்குகிறது. வித்யா சங்கரின் புகழுக்கு கட்டியம் கூறும் செப்பேடாக இந்நூல் அமைகிறது. இந்நூலை உருவாக்கிய தேனுகா நுண்கலைச்செல்வர். அரும்கலைகளை ஆராயும் ஆய்வாளர். நுண் உணர்வினர். கலைகளைக் கற்பதிலும் ஆய்வதிலும் மகிழும் கலைஅன்பர். **வண்ணங்கள் வடிவங்கள்** என்னும் தன் முதல் நூல் மூலமே கலை உலகில் சுவடு பதித்த நல்லாசிரியர். விமர்சகர். கூர்த்தமதியும் அறிவாற்றலும் அமைந்த தேனுகா வளர்கலை உலகின் குறிப்பிடத் தகுந்த விமர்சகராக வளர்ந்துள்ளார். கலைச் செல்வங்களைப் பற்றிய ஆய்வு நூல்களை அழகுணர்வுடன் அழகிய நூல்களாக வெளியிடுவதில் அளவிலா மகிழ்ச்சி அடைகிறோம்.

Koviloor Digital Library

கற்பக விருட்சம்
கோட்டோவியம்
1988



Koviloor Digital Library

பொருளடக்கம்

அணிந்துரை
டாக்டர் ஔவை நடராசன்
12

முன்னுரை
பிரகாஷ்
17

வித்யாசங்கர் ஸ்தபதியின்
சிற்ப மொழி
54

வித்யாசங்கர் ஸ்தபதியின்
வாழ்க்கைக் குறிப்புகள்
76

வித்யாசங்கர் ஸ்தபதி எழுதிவைத்துள்ள
சிற்பத்திற்கான பல்வேறு குறிப்புகள்
86

Koviloor Digital Library

வண்ணங்கள் பற்றிய
சிற்பியின் குறிப்புகள்
106

கோட்டோவியங்களும்
வரைகோட்டோவியங்களும்
Sketches and drawings
109

சிற்பியின் சிற்பக் குறிப்புகள்
கையெழுத்துப் பிரதிகள்
133

Collections, Awards, Exibition
140

சிற்பியின் படைப்புகள்
புகைப்படங்கள்
146

Koviloor Digital Library

அணிந்துரை

டாக்டர் ஔவை நடராசன்

செயலர், தமிழ்வளர்ச்சி-பண்பாட்டுத்துறை, தமிழக அரசு.

என்னுடைய இதயத்தில் அலைமோதும் எண்ணங்களை இப்படித்தான் என்னால் சொல்லமுடியும் என்று நிறம் ஒழுகும் ஓவியத்தை ஒரு கலைஞன் வரைந்து காட்டினான் என்பார்கள். ஓவியம், சிற்பம், கைவினையின் கவினைக்காட்டும் கலைப் பொருள்கள். இவையெல்லாம் உருவாக்கியவன் உணர்வுகளை உதடில்லாமல் ஒலித்துக் கொண்டுதான் இருக்கின்றான். கவிதைக்காது கொண்டவனுக்குத்தான் அக் கருத்து காதில் விழும். கவிதைக் காதும் கலை மிளிரும் கைவிரலும் கொண்டவர்தான் அரிய நண்பர் **தேனுகா.**

ஓராயிரம் பேருக்கேனும் தெரியாத நுணுக்கங்களை ஒவ்வொரு வரியிலும் வரைந்து காட்டுகின்ற தேனுகாவின் திறமையை **வண்ணங்கள் வடிவங்கள்** என்ற நூல் நமக்கு அறிமுகப்படுத்திக் காட்டுகின்றது.

கல்லில் நார் உரிப்பது என்பார்கள். கல்லிலிருந்து கலையின் ஆடையை உரித்துப் புதுவகையான, சிற்பப் பின்னல் செய்து காட்டுவதில் **வித்யாசங்கர் ஸ்தபதி** என்ற சிற்பிக்கு தனித்த முத்திரையுண்டு. உளியால் கல்லுக்கு உயிரூட்டி, அழகு கொழிக்கும் வடிவங்களை வடித்துத் தருகின்ற சிற்பியின் கைத்திறத்தில் வெற்றிச்

Koviloor Digital Library

செயல்களின் வெளிப்பாடுகளை புதிய உரைநடை வார்ப்பில் வரைந்து காட்டும் தேனுகாவின் புலமையைப் பாராட்டி மகிழ்கிறேன்.

நவீன சிற்பிகளுக்கு எப்பொருளும் சிற்பப் பொருளாகலாம். காற்றிலும், நீரிலும், மழையிலும் பல்வேறு வண்ணங்களையும் வடிவங்களையும் பெறும் கூழாங்கற்கள் கூட அவர்களின் கருத்தைக் கருக்கொள்ளும் சிற்ப மூலங்களாகும். பருப்பொருள் உண்மையைத்தாண்டி கருத்தமைவான உண்மையைத் தேடுவதிலேதான் உயர்ந்த சிற்பிகளின் நாட்டம் அமைந்திருப்பதை தேனுகா பல்வேறு இடங்களில் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இதுவரையில் இப்படி ஒரு நூலை நான் படித்ததில்லை. இதுபோல் எழுதியவர்களையும் நான் பலராகக் கண்டதில்லை. வங்கியில் பணியாற்றிக் கொண்டு, கலைவான வெளியில் சிறகடித்துக்கொண்டிருக்கும் சிந்தனைப் பறவையாகவும் எழுத்தோவியராகவும் தேனுகா காட்சி தருகிறார். இது எளிமையான நூலில்லை; ஆனால் இனிமையான நூல். புரிந்து கொள்ள முடியாத நூல் என்று சொல்ல முடியாது; புரிந்து கொள்ள வேண்டிய நூல் என்று பரிந்துரைக்கிறேன். புதிதிலும் புதிதான மாலைப்பூங்காற்று சுமந்து வரும் கலை நறுமணக் கட்டுரைகளைத் தமிழ்ச் சிந்தனையோடு தந்து வரும் தேனுகாவை வாழ்த்தி மகிழ்கிறேன்.

Koviloor Digital Library

முனீஸ்வரன்
கோட்டோவியம்
1971

Koviloor Digital Library

முன்னுரை

பிரகாஷ்

ஓவியம்வரைவது ஒரு வகையில் கவிதை எழுதுவது, சங்கீதம் இசைப்பது ஒரு வகையில் சிற்பம் செதுக்குவது. கவிதை பாடுவது ஒருவகையில் சுதைச் சிற்பம் வழிப்பது. சிற்பம் செதுக்குவது ஒரு வகையில் வீணை மீட்டுவது.

மாக்சிம் கார்க்கி சொன்னானே: "உன் அழகை என்னால் சொற்களால் வர்ணிக்க இயலாது. ஆனால் உன் அழகை ஒரு வயலினில் இசைத்துக் காட்ட முடியும்."

இப்படி ஒரு கலையை மறு கலையால் ஆழ்ந்து சித்திரிக்க முயலும் போக்கு உலகக் கலைஞர்களிடம் வலுத்துப் பெருகிவிட்டது. தமிழகத்தில் ஓவியக் கலைக்கு அருமையான விமர்சகர்கள் தோன்றிவிட்டார்கள். இவர்களது விமர்சனம் விமர்சனக் கலையாக மட்டுமின்றி அதுவே ஓர் இனிய இசையனுபவமாகவும் கவியனுபவமாகவும் சிற்ப சாதுர்யமாகவும் துலங்குவது தமிழின் பெருமையாக நான் சொல்ல விரும்புகிறேன். ஓவிய விமர்சகர் தேனுகா அவர்கள் இந்தச் சாதனையை ஒரு சின்னஞ்சிறு பொறி நெருப்பாய் ஊதிக் கிளப்பி, காட்டு மூங்கில்களில் பற்றி எரியும்

Koviloor Digital Library

பெருநெருப்பாய் மொழி ஜாலங்கள் புரிகின்ற கவிய னுபவமாய் ஸ்தபதி வித்யாஷங்கர் அவர்களின் கலை யனுபவத்தை இலக்கிய அனுபவமாய் மாற்றும் ‘அல் கெமி’ ரஸவாதம் புரிகிறார். என்னைப் பொறுத்த வரையில் தேநுகாதான் தமிழ் உலகின் முதல் கலா ஓவியசிற்ப விமர்சகர். இது பலருக்கும் இடைஞ்சல் விளைவிப்பதுதான். இவருக்கு முன்னால் ஓவிய விமர் சகர்கள் இருந்திருக்கிறார்கள். சங்கீத விமர்சக வித்த கர்கள் இருந்திருக்கிறார்கள். இல்லையென்று சொல்ல முடியாது. ஆனால் ஒரு கலை அனுபவத்தை மறு கலை தரிசனமாகத் தரிசனத்தை வேறொரு கலா மேதைமையாக ஒன்றுக்குள் ஒன்று புகுந்திருக்கும் கலை நுட்புங்களைத் தன்னந்தனியராய்க் கலைக்கு தமிழாய் உருமாற்றம் செய்து தரும் அபூர்வ கலை வெற்றியை-தத்துவச் சிறப்பை 2000 வருடத்து தமிழ் வரலாற்றில்-இலக்கிய வரலாற்றில் - கலை வரலாற் றில் தேநுகா என்கிற நுண்கலைஞனால் மட்டுமே சாதிக்க முடிந்திருக்கிறது. தேநுகா இம்முறை ஓவியத் திலிருந்து சிற்பத்திற்கு தமிழின் கவனத்தைத் திருப்பி இருக்கிறார்.

வித்யாஷங்கர் ஸ்தபதி தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு பல ஆண்டுகளுக்கு முன்பே அறிமுகமாகி இருக்க வேண்டியவர். நுண்மையான அவரது ஈடுபாடு ஆச் சர்யமான கலையாகும். கும்பகோணம் ஓவியக்

Koviloor Digital Library

கலைக்கல்லூரியில் பல்லாண்டுகளாக சிற்பக் கலைப் பேராசிரியராக இருந்துவரும் இவரிடமிருந்து நூற்றுக்கணக்கான சிற்பிகள் உருவாகி நாடெங்கும் பரவி வருகிறார்கள்.

வித்யாஷங்கர் ஸ்தபதியிடம் பேசிக் கொண்டிருப்பதே தனியான இன்பமாகும். அருகிலிருந்தாலே கற்பூர மணம் வீசும். துலாம்பரமாக நெற்றியில் துலங்கும் சந்தனக் கீற்றும், திருநீறும் காண்போரை இன்புறுத்தும்-தோள்களில் தவழும் சிகையும், ஆழ்ந்த வண்ணங்கள் கொண்ட நவீனத்துவம் புழங்கும் -சற்றே அயலகச்சாயல் வீசும்-ஜிப்பா-மெல்லிய நீண்ட-உடலும், ஆழ்ந்த கண்கள், அவற்றின் நடுவிலே சுழலும் உண்மை ஒளி வீசும் கண்கள்-இப்படி மிகச் சுலபமாகவே அவரைக் கலைஞனாக இனங்கண்டுவிட முடியும். யாரிடமும் குழந்தைபோல் பழகும் இனிய சுபாவம். 'நான் கலைஞன்-நான் ஒரு மாதிரி-நான் கோபக்காரன்-ஒரு நேரம் போலிருக்கமாட்டேன்' என்றெல்லாம் பக்கத்திலிருப்போரிடம் கூறியபடியே தன் இனிமைச் சுபாவம் சற்றும் மறவாது மாணவர் ஆசிரியர் ஓவியர் விமர்சகர் கலைப்புலவர் என்ற பேதா பேதமற்று எல்லோரிடமும் தனது உணர்ச்சிப் பொறி கலக்கி தனக்கே உரித்தான மெல்லிய குரலில் வித்யாஷங்கர் ஸ்தபதி விளக்கும்போது யாரும் வசப்பட்டு நிற்பதைப் பலமுறை பார்த்திருக்கிறேன்.

Koviloor Digital Library

கும்பகோணத்தின் அருகே காவிரி பாயும் ஆற்றுப் படுகை ஓரம் அழகிய சின்னஞ்சிறு வீடுகளின் மத்தியில் அமைந்துள்ள வித்யாஷங்கர் ஸ்தபதியின் இல்லமும் காவிரியின் ஓரத்தில் எங்கும் மனோகரமான சூழலில் பச்சைப் பசும் புல்வெளிகள், சோலைகள், வானளாவ வளர்ந்து நெடிதோங்கி நிமிர்ந்திருக்கின்ற கலகலக்கும் ஆலமரங்கள், அரசமரங்கள் ஆச்சர்யம் தரும். இந்த சூழலில் அமைந்திருக்கும் வித்யாஷங்கர் ஸ்தபதியின் இல்லமே ஒரு கலைக்கோவிலாய் விளங்குகின்றது.

வீட்டின் ஒரு மருங்கில் காவிரியின் கால்வாய் சலசலக்கும். நடுவிலே இவர் வீட்டின் முன்றிலில் அமர்ந்து தன்னந்தனியராய் இவர் தன் கலைப் படைப்புகளில் சிற்ப சாதுர்யத்தை சாதித்துக் கொண்டிருக்கும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். பல்லாண்டுகளுக்கு முன்பே இவரது 'ஒரு கலைஞரின் படைப்புக் காட்சி' (One-man-show) தஞ்சை மாநகரில் அமைத்துக்காட்ட விரும்பி 'தஞ்சை சும்மா இலக்கியக் கும்பலினர்' சார்பில் நான் ஸ்ரீ வித்யாஷங்கர் ஸ்தபதி அவர்களை அணுகியபோது அவரது கலைக்குடிலைக் கண்டின்புற நேர்ந்தது. அப்போது அவர் என்னைப்பார்த்து, 'உங்களுக்கு ஏன் இந்த வேலை?' என்று மிகவும் கவனமான தனது எச்சரிக்கைக் குரலுடன் மறுத்தார். 'ஓவியக்காட்சி

Koviloor Digital Library

வக்கிறதுங்க ஒரு மாதிரியா செய்து காட்டிடலாம் அதிகமாத் தொந்தரவு ஒண்ணும் கிடையாது. இந்தப் படம், ட்ராயிங் எல்லாத்தியும் சுருட்டி எடுத்துட்டுப் போயிரலாம். ஆனா பாருங்க இந்த சிற்பக் காட்சின்னா அதுக்குப் பெடஸ்டலே கொறஞ்சது பத்து இருபது வேணும். அதாவது செலையை வைக்கிற மேட. சிற்பங்கிறது நாலஞ்சு பரிமாணம், ஏன்? அதுக்கு மேலேயும் பரிமாணமுள்ள அபூர்வமான கலைங்க. பிளாஸ்டர் ஆஃப் பாரிஸ்ல ஆரம்பிச்சு மார்பிள் வரைக்கும் ஜாதிஜாதியாய்க் கல்லு, ஜாதிஜாதியாய் மாவுப்பொருள், சுண்ணாம்பு, சிமிண்ட்ன்னு நெறைய பண்ணலாம். நெறைய பண்ண முடியும். உலோகம்னு ஆரம்பிச்சீங்கண்ணா இரும்புல தொடங்கி பிளாட்டினம் வரைக்கும் அப்புறம் பீங்கான் - கண்ணாடி அப்படீன்னு ஏராளமான பொருள்களை பேஸா எடுத்துக்கிட்டு செய்யிறது மட்டுமில்ல - சூளையில வச்சு சுட்டெடுத்து செய்யிற டெர்ரகோட்டா சிற்பங்கன்னு எத்தனையோ வகை... நான் கண்காட்சி வக்கணுமின்னா (நான் ஒரு வெர்ஸடைல் கலைஞன்ங்க. நான் எல்லா எக்ஸ்பரிமென்டும் செஞ்சு பார்த்திருக்கிறேன்.) நாப்பது அம்பது மாடலே இருக்கு. என்னோட சிற்பங்கள் இந்தியா பூராவும் செதறியிருக்கு. பலவேறுபட்ட சிற்பக் கண்காட்சிக்காகவும் அரசினர் நடத்துன சிற்பக் கலை

Koviloor Digital Library

ஓவியக்கலை மற்றும் காண்ட்டெம்ரரி ஆர்ட் காட்சிகளுக்கும் என்னோட சிற்பங்கள் போயிருச்சு. இப்போ ஒங்க ஆர்வத்துக்கு நான்... நான்... அந்த எல்லா சிற்பங்களையும் ஒண்ணு சேர்த்து வாங்கி பத்தரமா ஒங்க காட்சில வைக்கிறதுன்னா ஏராளமா செலவும் ஆகும். எதுக்குங்க? அப்படியே வச்சீங்கண்ணாலும் அதுக்கேத்த ஹால், பெடெஸ்டல், மேடை இதெல்லாம் தயாரிக்க ஏராளமாச் செலவும் ஒழைப்பும் கஷ்டமும் ஆகும். வாண்டாம். அதுக்கு பதிலா எங்கிட்ட படிக்கிற மாணவங்களோட சிற்பங்கள் கொஞ்சம் இருக்கு. மாணவன்னோடதுனா மட்டமா நெனைச்சிடாதீங்க. ஒண்ணொண்ணுமே அபூர்வமான கலைப்படைப்பு. என்னோட மாணவங்களுக்கு நீங்க ஒரு சந்தர்ப்பம் கொடுத்தா அது போதும். மாணவங்களே வந்து எல்லா வேலையும் செஞ்சு ஒதவிடுவாங்க. அது சொலபம். அவங்கள ஊக்குவிக்கிறதுங்கறது பெரிய தொண்டு...''

பல ஆண்டுகளுக்குப் பின்னால் இதை நினைத்துப் பார்க்கும் போது மெய் சிலிர்க்கிறது.

தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் துணிவான கலைஞராகவே இருந்தாலும் தனது மாணவர்களை அதே துணிவுடன் அறிமுகம் செய்யும் துணிவும் சிறப்பும் உள்ள கலைஞர்கள் உலகில் குறைவாகவேதான் இருப்பார்கள். வித்யாஷங்கர் ஸ்தபதி பெருங்

Koviloor Digital Library
கோவிலூர் ஆதீனம்
Acc. No: 268
கோவிலூர்-630 307

குணம் நிறைந்த அருமைமிகு சிற்பியாவார். இவரைத் தமிழ்கூறும் நல்லுலகம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது. பொதுவாகவே மக்கள் மத்தியில் புகழ் பெறுவதென்பது எந்த உண்மையான கலைஞனுக்கும் சிரமமாகவே இருக்கின்றது. காரணம் கலையின் தீக்ஷண்யம் வெகுஜனத்தை அடைய மறுக்கிறது என்பதால் தான். "ஒரு கலைப் படைப்போ அது வெளியான உடனேயே வெகுஜனப் ப்ரீதியைப் பெற்று உடனேயே புகழடைகிறது என்றால் அதன் படைப்பிலேயே ஏதாவது கோளாறிருக்க வேண்டும். எளிதில் அங்கீகாரம் பெற்றுவிட என்ன காரணம் என்று பார்த்தால் மிக அற்பமான காரணங்களுக்காகவே அந்தக் கலைப்படைப்பு மக்களின் அங்கீகாரத்தைப் பெற்றிருப்பது தெரிய வரும்"- என்று தமது கட்டுரையில் கூறுகிறார் தமிழ்க் கலைஞர் க. நா. சுப்ரமண்யம் அவர்கள். ஏதோ அடாவடித்தனமாக இது தோன்றினாலும் அதனுள் பொதிந்து கிடக்கும் அரும்பெரும் குணங்கள் மெல்ல மெல்லத் தெரிய வரும். இது இலக்கியத்துக்கு மட்டுமல்ல. தமிழின் கலைகள் ஒவ்வொன்றின் துறைக்கும் இது பொருந்தும்.

வித்யாஷங்கர் ஸ்தபதி இன்றைய நவீன ஓவியர்களின் போக்கிலே வந்தவரல்லர். நிஜமாகவே ஸ்தபதிகள் குடும்பத்தில் பாரம்பர்யமாகவே சிற்பக்

Koviloor Digital Library

கோபிகிருஷ்ணன்
கோட்டோவியம்
இந்தியன் இங்க்

Koviloor Digital Library

Koviloor Digital Library

கலையில் தேர்ந்து விளங்கிய சுவாமிமலை கௌரி ஷங்கர் ஸ்தபதி அவர்களின் மகனாக சுவாமிமலையில் பிறந்தவர். தகப்பனார் கௌரிஷங்கர் ஸ்தபதி அவர்களைத் தெரியாதவர்களே அந்தக் காலத்தில் இல்லை. ஆறு சாஸ்த்ரம், பதினெண்புராணம், அறுபத்து நான்கு கலைஞானம், எல்லாவற்றையும் கற்று, அந்த காலப் புராதன மரபுக்கேற்றபடி மகா சாஸ்திர விற்பன்னராய் வாழ்ந்து வந்தார். இந்தய காலத்தில் தான் இந்திய ஓவிய மரபு (மாடர்ன் ஆர்ட்)நவீன மரபு இந்தியாவில் வங்காளமரபிலிருந்து கிளம்பியது என்பதை ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டும். **நந்தலால் போஸ்**, **அபீந்தர்நாத் டாகூர்**, **ரபீந்தரநாத் டாகூர்** போன்றோர் இந்திய ஓவிய மரபைப் பரப்பிக் கொண்டிருந்தார்கள் என்றாலும் இவர்களின் மரபும் பூர்வ பழைய மரபுதான்.

ரபீந்தரநாத் டாகூர் சாந்திநிகேதனில் பல அரிய சோதனைப் படைப்புகளை உருவாக்க வழி கண்டார். என்றாலும் **கே.சி.எஸ். பணிக்கர்** என்ற ஓவியருடன் தான் தமிழகத்தில் நவீன கலை விழிப்பு ஏற்படுகிறது. இவருக்கு முன்னிருந்த **DP. ராய்சௌத்ரி** பெருமைமிகு சிற்பியாக விளங்கினார். ராய்சௌத்ரியின் சிற்பங்கள் இந்தியத் தன்மை கொண்ட படைப்புகளாக இருந்தன. சென்னையில் கடற்கரையில் இருக்கும் **உழைப்பாளர் சிலை** இவ

Koviloor Digital Library

KOVILOOR MADALAYAM KOVILOOR-630 307 (NEAR) KARAIKUDI PHONE

ருடையதுதான். **காந்தி சிலை**, டில்லியிலுள்ள சுதந்திரப் போராட்ட சிலை ஆகியன எல்லாம் ஒரே விஷயம் கொண்ட பல மரபார்ந்த அனாடமி சிறப்புள்ள பழைமைப் போக்கு (மைக்கேல் ஆஞ்சலோ) கொண்டவையே. இவைகளை எல்லாம் ராய்சௌத்ரியின் பாணியாகவே குறிப்பிடலாம்.

பிறப்பால் வங்காளியான **ராம்கிங்கர்** மிகவும் உணர்ச்சிகரமான வெளியீடுள்ள சிற்பங்களைச் செதுக்கினார். இவைகளையும் நவீன சிற்பங்களாக நாம் கொள்வதற்கில்லை. ராம்கிங்கரின் சிற்பங்களைப் பார்த்துப் பழகியாக வேண்டும். இவரது சிற்பங்கள் இந்த மண்ணின் தன்மையைக் காண்டவை. சொல்லப்போனால் ராம்கிங்கருடைய முதல் வெற்றியாக இவர் தன்னுடைய சிற்பங்களைப் பெடஸ்டலின் மேல் நிறுத்தாமல் வெளியேயுள்ள இடம், ஆகாயம் ஆகிய வெளியோடு தொடர்பு கொள்ள வைத்தார். சிற்பங்களை ஸ்பேசுடன் சேர்த்தது வியக்கத்தக்கது. நவீன சிற்பிகளில் ஐரோப்பியர்களில் **ரோடோன்** Rodon) காலத்திலிருந்து நவீனத்துவம் (modernity) வெளிப்படுகிறது. இவரையும் என்னால் நவீன சிற்பியாகவும் சொல்ல முடிவதில்லை. நவீனத்துவம் என்பது (modernity) முழு நவீனத்வமாக எங்குமே செயல்படுவதில்லை. ரோடோன் ரியலிஸ்டிக் (realistic)

 அமைப்பில் பழம் போக்கினைத் (old school)

Koviloor Digital Library

தவிர்த்து அதன் மேலேயே தமது தமதேயான நவீனப் போக்குள்ள சிற்பங்களைப் படைத்தார். **பிக்காசோ** (Pablo Piccaso) வின் சிற்பங்கள் நவீனத்துவத்தின் புதிய வழி காட்டின.. பிக்காஸோ பரிமாணங்களில் (dimension) புதுமை செய்தார். முகங்களைச் சிதைத்து வெட்டிப் பின் இணைத்து ஒரே பார்வையில் வினோதமான பல பரிமாணங்களை ஓவியத்தில் ஏற்படுத்தியது போல் க்யூகில் (cubical), கோனிக்கல் (conical) சிலிண்டிரிகல் (cylindrical) உருவங்களை ஒருவித உணர்ச்சிப் பிரகாசத்துடன் காய்ச்சல் உருவச் சிதைப்பு (distortion) முறையிலும் நவீன முறையிலும் (modern approach) சிற்பங்களைப் படைத்து உலகம் முழுமைக்குமான ஒரு நவீனத்துவத்தை அறிமுகம் செய்தார். இவரைத் தொடர்ந்த டாடாயிஸவாதிகள் (Dadaists) மற்றும் சர்ரியலிஸ (Surrealism) அமைப்பில் அற்புதம் சமைத்த **ஸால்வடோர் டாலியின்** (Salvador dali) சிற்பங்கள் : நவீன ஓவிய சிற்பப் பார்வைகளைப் பயன்படுத்தின. இதைத் தொடர்ந்து அமெரிக்காவின் **டேவிட் ஸ்மித்** (David Smith) **இசமுநாகுசி,** (Isamunakuzi) ஆகியோரும் சிறப்பாகக் குறிப்பிடத் தகுந்தவர்கள்.

ஜியோமிதி வடிவங்களில் (Geometrical) சிற்ப சாதனைகள் செய்து காட்டிய பலரை இங்கே குறிப்பிட முடியும். அலெக்ஸாண்டர் கால்டரின் (Alexander

Koviloor Digital Library

Calder) சிற்பங்களை ஓவியங்களா, சிற்பங்களா, என்று கூறமுடியாது. அத்தனைக்கும் அவை ஒன்றி ணைந்து ஒன்றியங்கி ஒன்றிலொன்றாய் சிறப்பாய் வியப்பளிக்கின்றன. இவைகளை இந்த மரபோடு வைத்துப் பார்க்கும் போது நமது இலக்கியக்காரர் களும் ஓவிய சிற்பிகளும் தனித்தனியே தனித்தனி உலகங்களில் வாழ்ந்து கொண்டிருப்பது அபத்தத்தி லும் அபத்தமான விஷயமாகும். நவீன உலகம் எல் லாவற்றையும் ஒருமுகமாகக் காணும் தரிசனத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறதென்பது ஆழ்ந் துணர வேண்டிய விஷயம்.

கால்டரின் ஓவியத்தை இயக்க ஓவியமாகவும் அசைவு மற்றும் உணர்தல் என்ற இருபெரும் பிரிவுகளின் கீழ் பாய்வன - பறப்பன - நீந்துவன போன்றவைகளை ஓவியத்திலும் சிற்பத்திலும் சிக்க வைக்கும் அபார சாதனைகளை சாதித்துக் கொண்டிருக்கிறார். Futurism போன்ற புது ஓவிய வழிகளையெல்லாம் இன்று உலகம் இங்கே ஓவியம்-சிற்பம்-சங்கீதம்-இலக் கியம் - நாடகம் - நடனம் போன்றவை எல்லாமே தனித்தனியான உலகங்களாகவே விலகி நின்று விட் டதால் தான். இது மிகக் கொடுமையான ஒரு விஷய மாகும். பல்வேறுபட்ட கலைத்துறைகள் இந்தியா வின் பல்வேறுபட்ட பகுதிகளிலும் தனித்தனியாக ஒன்றை ஒன்று முரணிநிற்கின்றன. மிகவும் உன்ன தமான ஒரு பழங்காலம் நமக்கிருக்கிறது. அப்போது

Koviloor Digital Library

இந்தக் கலைகள் இப்படித் தனித்தனியாக இப்படித் தறிகெட்டு நிற்கவில்லை. ஒன்றை ஒன்று போஷிப்பது. ஒன்றை ஒன்று ஊடுறுவது. ஒரு கலையுள் மற்றொரு கலை உற்பவித்தது. ஒருதுறை மற்றொரு புதுத்துறையைக் கண்டு பிறந்தது. ஆக ஒன்றிலிருந்து ஒன்று பிறந்தது ஒன்றும் ஒன்றாக ஒரே நோக்கம் கொண்ட ஒரு வாழ்வை நமக்கெப்போதும் நினை வூட்டிக் கொண்டே இருந்தது. தமிழிலும் கூட,

''ஒன்றாகக் காண்பதுவே காட்சி-புலனைத்தும்
வென்றானின் வீரமே வீரம்; என்றாலும்
சாகாமல் கற்பதுவே கல்வி – எவ்வெவர் தம்

ஊட்டாமல் உண்பதுவே ஊண்'.

என்ற அற்புதமான வாழ்நெறியை நமக்குத் தந்து போயிருக்கிறார்கள். தமிழர்களின் எந்தக் கலையை எடுத்துக் கொண்டாலும் இது போன்ற ஒரு ஏக லக்ஷ்யத்தை நோக்கியே அது செல்வதை இந்தியாவின் எம் மொழியிலும் எம்மாநிலத்திலும், எக்கலையிலும் இதே பழைய ரீங்கார ஆதார ஸ்ருதியைக் காண லாம்.

இதனைத் தமது விமர்சன நோக்கினாலும் கலை ஆளுமையினாலும் தமது நூல்களில் சாதித்து வரு வது வேறு யாராலும் சொல்ல முடியாத சாதனை யாகவே சிறப்பெய்தியுள்ளது. ஒரு கலையை மற்

Koviloor Digital Library

றொரு கலை எட்டிப் பாராதிருத்தல் எத்தகைய இழப்பு? என்பதை இந்தியக் கலைகளை ஆய்வு செய்யும் யாரும் வருத்தத்துடன் உணர நேருகிறது.

தேநுகாவின் இரண்டாவது சிற்ப விமர்சன நூலாகிய **வித்யாஷங்கர் ஸ்தபதியின் சிற்பமொழியிலும்** இதே அருஞ் சிறப்புகளைத் தமிழிலக்கியத்திற்கு புதுவது தரும் பான்மையாகவே இலக்கியமாக்கியிருக்கிறார். வித்யாஷங்கர் ஸ்தபதியின் சிற்பச் சாதனையின் இடத்தை வரையறுத்ததோடு சிற்ப உலகத்தில் அவரது இடம் எது என்பதையும் காட்டி வித்யாஷங்கரின் மற்ற கலை வாசனைகளையும் மீட்டி அவரது பூர்வ ஸ்தாயிலிருந்து நவீன ஸ்தாயி வரையிலும் அவரது வாழ்வோடு வரைந்து காட்டியிருப்பது தமிழின் இலக்கியத்தரமாக மாற்றிக் காட்டியிருக்கும் தேநுகாவின் சாதனை இலக்கியத் துறையில் மட்டுமல்லாது கலைத்துறையிலும் என்றும் ஒளிவீசும். -தமிழக ஓவியர்களின் நவீனத்துவ மின்மையை, கற்பனை வறட்சியை அடிக்கடி தேநுகா என்னிடம் சொல்லிச்சொல்லி ஐரோப்பிய மற்றும் வெளிநாட்டுச் சிற்பக் கலைஞர்களின் படைப்புகளுடன் ஒப்பிட்டுக் காட்டுவார். அப்போதெல்லாம் நான் நினைப்பேன் ''இதோ தமிழுக்கு ஒரு தகவு'' என்று. ஓவியர்-சிற்பி-இலக்கியவாதி - சங்கீதஞானி என்ற பதங்களை இணைத்து (Inter Discplinary Fusion)என்ற அற்புத

Koviloor Digital Library

மான ஒரு தற்கலப்புப் பரிமாண ரஸவாதம் மூலம் தமிழில் முதல் முறையாகவும் ஒரே வெற்றியாகவும் தேநுகாதான் தமது கலைக் கட்டுரைகளின் மூலம் தமிழில் இதை அனுபவமாக்கி வருகிறார். வித்யா ஷங்கர் ஸ்தபதியின் வாழ்வை கலையை விமர்சித்து அவர் எழுதியுள்ள இக்கட்டுரை இலக்கியம் மிகவும் நவீனத்தன்மை உடையது. பிக்காஸோ, ஈ.ஈ.கம்மிங்ஸ் என்ற மேதைகள் எப்படி ஒரு கலையிலிருந்து மறுகலைக்குத் தாவி ரஸவாதம் புரிந்தனரோ அது போல் தேநுகாவும் தமது கட்டுரை இலக்கியத்தின் மூலமாய் சங்கீதம் மற்றும் சிற்ப ஓவிய தத்துவ கவிதை அனுபவங்களை வித்யாஷங்கர் ஸ்தபதியின் பேரனுபவத்தோடு எழுதிக்காட்டுகிறார்.

வித்யாஷங்கர் ஸ்தபதியின் கலை அவர் தகப்பனாரிடமிருந்து வந்திருந்தாலும் எப்படி அது மரபிலிருந்து நவீனத்துவத்துக்குப் பயணம் போயிற்று? எப்படி வித்யாஷங்கர் ஸ்தபதி ஒரு நவீன முகத்தை தனது சிற்பங்களுக்காய் ஏற்படுத்திக் கொண்டார்? எப்படி ஐரோப்பாவில் பிறந்த ஸர்ரியலிஸம் இந்தியப் பழம் மரபார்ந்த பார்வையுடன் உள் தோய்ந்து வளர்ந்து கருப்பைக் கிழித்து ஒளிவீசி எதிர்காலத்தை நோக்கி இந்திய மரபார்ந்த புதுமையாகச் செயல்படுகிறது? என்பதை ஓர் அழகிய கலைச்சிற்பமாகவே இந் நூலில் சிற்பி தேநுகா இலக்கிய ஓவியமாக்கியிருக்

Koviloor Digital Library

மங்கை
கோட்டோவியம்
இந்தியன் இங்க்



Koviloor Digital Library

கிறார். வித்யாஷங்கர்ஸ்தபதி போன்ற பழைய மரபு களிலிருந்து புதிதாய் நவீன காலத்திற்கேற்ப பாய்ந்து முன்னேறி வந்த சிற்பிகளே வெகு குறைவென்றால் அவைகளைப் பற்றி தமிழ் போன்ற-ஒரு புராதன ராகம் போன்ற ஒரு கலை மனிதர் வேறு தமிழுக் கில்லைஎன்பதை ஞாபகமாக நினைவூட்டுவதே எனது கடமையாக உள்ளது. எல்லா இந்தியக் கலைஞர் களையும் போலவே இவரும் குருவிலிருந்து பிறந் தவர். இது இந்திய மரபின் ஆழத்தைக் காட் டும். வித்யாஷங்கரின் தகப்பனார் கௌரிஷங்கர் ஸ்தபதியே குருவாக அமைந்தது இவரது கலையை வெகுவாகப் பாதித்திருக்கிறது. மஹா சாஸ்திர விற் பன்னரான தந்தையிடமிருந்து வந்த மரபில் ஊறித் திளைத்தவர் நமது வித்யாஷங்கர் ஸ்தபதி. பழைமை முத்திரை-அளவு-பேதபாவங்கள்-லயம் என்ற நமது இந்தியப் பழம்சிற்ப நிபுணத்வங்களையெல்லாம் ஆழ்ந்து பழகி உருவானவர் வித்யாஷங்கர் ஸ்தபதி. சுத்தமான மரபிலிருந்து அவர் நடத்திய நீண்ட பய ணம் இவரது கலை வாழ்வின் சாதனை. இந்தியச் சிற்பிகளில் நவீனத்வம் (modernity) எவருக்குமே சாத்யமாகிவிடவில்லை என்கிற பயங்கர உண் மையை யாரும் உணர்ந்ததாகத் தெரியவில்லை. கொஞ்சம் தன் மூப்பாக இந்த இடத்தில் விமர்சிக் கிறேன் என்றாலும் தேநுகா போன்ற எம்மொழிக்

Koviloor Digital Library

கும் கிடைக்காத அபூர்வ கலை இலக்கிய விமர்சகர் இனியேனும் தமது முட்டையை உடைத்துக் கொண்டு இந்தியாவின் நவீனத்வமின்மையை திறந்து உடைத்து உண்மை ஒளிசிதற நம்மவருக்கும் அயலவருக்கும் எடுத்துக்காட்டவேண்டும் என்பதற்காக இந்த நீண்ட முன்னுரையை நான் எழுதச் சம்மதித்தேன். நான் ஒரு கலைஞன் என்பது எனக்குத் தெரியும். ஆனால் அதை எடுத்து நானே ஊருக்கெல்லாம் சொல்லும் அபத்தத்தை நான் செய்ய இயலாது. ஆயினும் இந்தியாவின் உண்மையான கலையின் மீது நாட்டம் கொண்ட சத்ய விமர்சகர் சிலரேனும் உண்மையை ஒப்புக்கொள்ள வேண்டும். நமது மரபிற்கு அபூர்வமான அற்புத பாரம்பர்ய குணங்கள், நுண் மைச் சிறப்புகள் – நமக்கு வியப்புத் தரும் விஷயங் கள் – ஏராளமுண்டு. அதே க்ஷணத்தில் கலைஞனை இவை எல்லாவற்றையும் வைத்து வரிந்து கட்டி கால மெனும் ஆழியுள் புதைத்து விடும் அசிங்கமான குண மும் அதற்கே உண்டு. இந்திய ஓவியர்கள் மட்டுமல்ல இந்தியக் கலைஞர்கள் மற்றும் நாவலாசிரியர்கள், விமர்சகர்கள் என்னும் பலரும் இந்த மரபு சமுத் திரத்தைக் கடைந்து அமுதமெடுக்கவில்லை. இது எனது நண்பர் அருங்கலைஞர் வித்யாஷங்கர் ஸ்தபதி அவர்களுக்கும், கலைத்துறையில் என் துணையான தேநுகாவுக்கும் அரோசிகமாகவும் இடர் தரும்

Koviloor Digital Library

அபிப்ராயமாகவும் மெத்தனம் பேசும் போலி மேதைமையாகவும் தெரியக்கூடும்.

அன்புள்ள கலைவாசகரே! நீர் தமிழர் என்பதால் தான் இந்த முன்னுரை! சிரமம்! நீரோ ஒரு ஐரோப்பியராக வங்காளியாக-மலையாளியாக இருந்தால் நான் கூறும் மரபின் பளு, அதன் கோரச்சுமை - அதிலேயே அழுந்தும் நமது கலைஞர்களின் வழக்கமான சாமியாட்டத்தனம் எல்லாம் தெள்ளெனப் புரியும். தமது தந்தையாரிடமிருந்து கற்ற மரபு எனும் மீகாமனுடன் பயணம் செய்து வித்யாஷங்கர் ஸ்தபதி எப்படி ஒரு அற்புதமான மரபிலிருந்து அற்புதமான நவீனத்துக்கு பயணம் போயிருக்கிறார்? என்பதையெல்லாம் நீங்கள் அறிந்து கொள்ளத்தான் இங்கே நினைவூட்டுகிறேன். வித்யாஷங்கர் ஸ்தபதியின் இந்தப் பாய்ச்சல் தான் அவரை இந்தியக்கலைகளில் ஒரு புதுப்பிறவியை எடுத்துக்காட்டுகிறது. இந்தியாவுக்கென்று இனி வரப் போகும் புதுமரபை - புது எழிலை-புது தர்சனத்தை - ஒரு கோடிகாட்டும் வேலையை நான் வித்யாஷங்கர் ஸ்தபதியிடம் காண்கிறேன். தமக்கென்றே ஒரு நவீன முகத்தை இந்த மரபிலிருந்தே தப்பி புதுக்கிளை விட்டு எழுப்பியிருக்கிறார் வித்யாஷங்கர் ஸ்தபதி. நவீனத்துவத்தை தமிழில் இனம் காட்டும் வேலையை இனி தேநுகாதான் செய்ய வேண்டும். ஸர்ரியலிஸப் போக்கைத் தமக்குள் உற்ப

Koviloor Digital Library

வித்து மிகப் பழம்பெரும் இந்திய மரபிலக்கணங்களு டன் குழைத்து, அதிலிருந்தும் விடுபடாமல் மரபார்ந்த மரபைப் பிளந்து புது ஒளிகாட்டும் இவரது திறம் தமிழுக்கே உரியது. இவரது **மிதுனம்** என்ற சிற்பம் எத்தனை இந்தியத்வத்தின் நவீன மரபை எட்டி யிருக்கிறது என்பதை அந்தச் சிற்பத்தை நேரில் பார்த்தால் அநுபவம் கலையாகும். இவரது ஆசிரிய ரான இன்னொரு வழி ஸ்ரீனிவாசலு ஆவார். கோவில்-குளங்கள் தேர்கள்-சுதைச் சிற்பங்கள் தெய் வீகப் படிமங்கள்-கற்களில் பேசும் நமது புராதன மொழி அவற்றிற்கப்பால் துலங்கும் ஆடை படர்ந்து மௌனம் மௌனத்துக்கப்பால் சுழலும் ரீங்காரம் எல்லாம் வித்யாஷங்கர் தமக்குள் ஆழ வெட்டி ஊற் றெடுக்க வைத்தது ஸ்ரீனிவாசலுவின் லாவக மான அலக்ஷியமான அநாயாசமான தூரிகைதான். பழமையிலிருந்து புதுமை நோக்கிய இந்தப் பயணம் எப்படி நேர்ந்தது என்பதை தேனுகா மிக நயமான உள்ளடக்கத்துடன் தமது படைப்பில் செய்திருப்ப தால் அதை மீண்டும் இங்கே கொச்சைப் படுத்த நான் விரும்பவில்லை. காரணம் நானும் கலைஞன் ஜாதி; இருவரும் எனது நண்பர்கள். அவர்கள் தகுதி பெரிது. எனக்கு இதெல்லாம் சிற்பக் கலைஞர் பலரும் தமிழில் அறியப்பட வேண்டிய சூழலில் இருக்கும் போது வாழும்காலத்தில் என்னுடன் புலர்ந்து வரும்

Koviloor Digital Library

இவ்விரு கலைஞர்களையும் தமிழகத்துக்கு – குறிப்பாக எழுத்துலகுக்கு - சொல்லிக்காட்ட வேண்டிய பொறுப்பை மிகச் சலிப்புடன் உணர்கிறேன்.

தமிழில் இலக்கியத் துறையில் சமீப காலமாகத் தான் ஓவியம் பற்றிப் பேசவும் விவாதிக்கவும் ஆரம்பித்திருக்கிறார்கள். சிற்பத்தைப் பற்றியோ சொல்லவே வேண்டியதில்லை. அநேகமாக ஓவியக் கல்லூரிகளுக்கு வெளியே தமிழகத்தில் – தமிழகத்தில் மட்டுமென்ன? -இந்தியாவிலேயே தனி ஓவிய சிற்பரசிகர்கள்–ஆர்வலர்கள்-இன்னும் வெகு குறைவாகவே இருக்கின்றனர். தமிழக பத்திரிகைகள் மேடைகள், சினிமாக்கள் இன்னும் தங்கள் படுதா நாகரீகத்தைக் கைவிடவில்லை. நவீன தமிழ்க் கவிதைகள் இன்னும் தமிழ்ச் சிற்பத்தை எட்டவில்லை. தமிழில் எழுதும் விமர்சகர்கள் இன்னும் (இன்றும்) 21ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் தங்கள் இலக்கியக் குடும்பலை விட்டு வெளி வந்ததாகத் தெரியவில்லை. இந்த அஞ்ஞானங்களுக்கு இடையே நம் கலைவாழ்வைச் சொல்லியாக வேண்டியிருக்கிறது.

நவீன் ஓவியங்கள் நவீன சிற்பங்களாய் மலர்ந்து நவீன ஓவியங்கள் நவீன கட்டிடக் கலைக்கு வழி வகுத்து நவீன சிற்பமுறை நவீன கட்டிடக் கலைக் கட்டுமானத்துக்கு மலர்ச்சி தந்து உலக முழுமையிலும் இதன் மாற்றங்கள் வளர்ச்சிகளாய் மாறி

Koviloor Digital Library

வரும் காலம் தமிழ் எழுத்தாளர்களும் இலக்கிய ஆசிரியர்களும் இன்னும் தங்கள் புராதன மரபு பேசிக் கொண்டு மூலையில் நின்று கொண்டிருப்பதை எத்தனை பேர் அறிவர்?

ஃபியத் மாந்திரியான் (Piet Mondrian) உலக கலைத் துறைக்கு வழங்கியிருக்கும் **நியோ - ப்ளாஸ்டிசிஸம்** (Neo-plasticism) மிக அற்புதமான மாறுதல்களை உலகெங்கும் ஏற்படுத்தி வருகிறது, என்பதைத்தமிழர் உணர்ந்தாக வேண்டும். மாந்திரியானின் விஷுவல் ஆர்ட் (visual art) என்ற இரு பரிமாணங்களிலிருந்தும் ப்ளாஸ்டிக் ஆர்ட் (plastic art) முப்பரிமாணத்தைக் காட்டியவர். ஓவியர்கள் - சிற்பிகள்- கட்டிட சர்வேயர்கள் - இன்ஜினியர்கள் - கட்டிடம் கட்டும் நிபுணர்கள் ஆகியோருடன் தொடர்பு கொண்டு கூடி புதிய எல்லோருக்கும் பயனான என்றும் உதவக் கூடிய கட்டிடக் கலையை சிற்பக்கலையை, அதையே ஓவியமாய் அதையே புதிய நிர்மாணக்கலையாய்(Neo-plasticism) சாதித்துக் காட்டியிருக்கும் புதுமைகளை எல்லாம் தமிழிலக்கிய வாணர் அறிந்து இன்புற்று அவற்றையும் தமதாக்கிக் கொள்ளும் வன்மையை தேநுகா தனது முதல் நூலான வண்ணங்கள் வடிவங்களில் சாதித்துக் காட்டியிருக்கிறார்.

இப்போது வித்யாஷங்கர் ஸ்தபதியின் கலையை விமர்சித்துக் காட்டுவதன் மூலம் தமது இன்னொரு

Koviloor Digital Library

Koviloor Digital Library

காமதேனு
கோட்டோவியம்
இந்தியன் இங்க்

Koviloor Digital Library

பகுதியை அறிமுகப்படுத்துகிறார் என்பது இச்சிறு நூலின் பெரும் சாதனை. அமெரிக்கா, ஃபிரான்ஸ், ஜெர்மனி நாடுகளில் இது போன்ற கலப்புக்கலைகள் பிறந்து கொண்டிருக்கின்றன. வெறும் கலப்பாக மட்டுமல்லாமல் தற்கலப்பாய் மட்டும் விளங்காமல் எல்லோருக்குமான (இது கம்யூனிஸம் சத்தியமாய் இல்லை) பொதுக்கலப்பை ஓவியத்திலும் சிற்பத்திலும் சாத்தியமாக்கிக் காட்டிய ஐரோப்பியக் கலைஞர் பலரை நினைவு கூர்கிறேன். இப்போது மூக்கு மட்டும் உணரும் நுகர்புணர்வு ஆன வாசனையை சிற்பத்தில் செதுக்க முயலுகிறார்கள். சாத்தியமாக்கியும் இருக்கிறார்கள். Futurists என்று இவர்களைக் கூறும் இத்துறையில் காலம் இடம் பரிமாணம் ஆகியவைகளையும் கடக்க முயன்றனர். ருசிகளை வர்ணத்தில் கொண்டு வந்தனர். நாக்கின் சுவைகளை ஓவியத்தில் நீட்டித்தனர். வீதியின் ஓசைகளைச்சிற்பத்தில் எதிரொலிக்க வைத்தனர். இவற்றைத் தமிழில் கேட்கும் போது ஏதோ மஹேந்திர ஜாலம் போலத் தோன்றலாம். ஆனால் இவையெல்லாம் நீங்கள் சொல்லும் பழைய மரபுகள் தான். கல்லுக்குள் சிற்பத்திறத்தால் சங்கீத சுரங்களைப் பொதித்து வைத்த சப்த ஸ்வரத் தூண்கள் நினைவுக்குவரவில்லையா? **மைக்கேல் ஏஞ்சலோவின்** பாயும் குதிரைகள் பாய்வன போன்ற பாவத்தைக் காட்டும் கலைப்படைப்புகள் தான்.

ஆனால்பாய்வன அல்ல.அசயாத் தன்மை கொண்ட பாய்ச்சலை நிலை நிறுத்தியவை (நிற்பவையே). ஆனால் இன்றைய நவீன ஓவியர்கள் (futurists) வேகத்தை ஒரு பார்வையிலேயே ஓவியமாய் விசிறி யடித்துப்பறக்க வைக்கிறார்கள். **ஜியகோமோபோல்ல** வரைந்துதான். இந்தப் பின்னனியில் நாம் நமது வித்யாஷங்கள் ஸ்தபதியைப் புரிந்து கொண்டு ஆகவேண்டும்.தேநுகா இந்த இடத்தில் தான் நமக்கு அத்தியா வசியமாகிறார். நமது மரபின் கலை நம்முள் எத்தனை அழுத்தமாய்ப் பதிந்து விழுந்திருக்கிறது என்பதை வருத்தத்துடன் சிந்திக்கிறார். வித்யாஷங்கர் ஸ்தபதி - அவரது படிப்படியான பயணம் நவீனத்வத்தில் அவர் தேர்ந்து கொண்ட நமது இந்திய மரபுக்கு முரணான (ஆனால் இணக்கமான) ஸர்ரியலிஸ முகம் ஆச்சர்யமானது. அமைவுற்றுப் பொலிவது. இதனை எட்டுவதே வித்யாஷங்கர் ஸ்தபதியின் கலை வெற்றி. இதைத் தமிழுக்குத் தந்திருப்பது தேநுகாவின் கலைச் சிறப்பு. இதனை அறிய வேண்டுவதே தமிழிலக்கிய ரசிகனின் நுண்மை. இதனைச் சாத்தியமாக்கியிருப்பதே இச்சிறிய நூலின் வெற்றி.

தேநுகா விமர்சகராயினும், சிறந்த கலைஞர். காவிரிக் கரையில் அதன் முழுத் தாக்கத்துடன் கலைக் குடும்பம் ஒன்றில் பிறந்தவர். சிறு வயதிலேயே இந்திய மற்றும் தமிழகக் கோவில் கலை

Koviloor Digital Library

களால் ஈர்க்கப்பட்டவர். இவரது தந்தை ஒரு நாதஸ்வரக் கலைஞர். அவரது சகோதரரும் ஒரு சிறந்த நாயன வித்வான். இவர் ஒரு பெரிய விஷயாதி. பெரும் கற்பனைத் திறன் கொண்ட மேதாவி.

ஸ்வாமிமலையில் பிறந்தவர் தேநுகா. தேநுகா என்ற அபூர்வ ராகத்தை புனை பெயராகக் கொண்டு தமிழ் இலக்கிய ஏடுகளிலும் ஆங்கில நாளேடுகளிலும் சிற்ப சித்திர காவிய ரசனைகளை கலைக் கட்டுரையாக சின்னஞ்சிறு வரிகளில் சங்கீத லயம் ததும்ப தமிழுக்கே புதுமை தரும் எழுச்சியுடன் படைத்து வருபவர் (ஆங்கிலத்திலும்).

தமிழில் சிம்ம சொப்பனமாகக் கருதப்படும் இலக்கிய விமர்சனக் கலைஞர் மறைந்த **க.நா.சுப்ரமணியம்** அவர்களை ஓவியக் கலை விமர்சகராக்கிய பெருமையும் தேநுகாவுக்குண்டு. பலருக்கு இது தெரியாது. தேநுகாவின் முதல் நூலான **வண்ணங்கள் வடிவங்கள்** (தமிழக அரசின் 1987ஆம் ஆண்டிற்கான பரிசு பெற்ற முதல் ஓவிய விமர்சன நூல்-தமிழ்) வெளிவந்த போது இதன் சிறப்பை அறிந்து துய்த்த க.நா.சு. அவர்கள் முதன் முதலாக ஓவியத்துறை விமர்சனக் கட்டுரைகளை ஆங்கிலத்திலும் தமிழிலும் (Indian Express - An Oasis in the Tamil Desert தீபம் மாதஇதழ், நுண்கலை அரையாண்டிதழ்) படைத்து அளித்தார். இதில் ஆங்கிலக் கட்டுரை மிகவும் ஆழ்ந்த பாராட்டிற்குரியது.

Koviloor Digital Library

தேநுகாவின் கலை ஈடுபாடுகளில் கவிதையை முக்கியமாகக் குறிப்பிடவேண்டியதாகும். இவரது கவிதைகளைப் பாராட்டி வெளியிட்டவரும் க.நா.சு. அவர்களே..

தேநுகா அவர்கள் தமிழிலக்கியத்தில் வியப்பளிக்கும் நவீன வியக்தி கட்டுரைகளை எழுதுவதில் இவர் காட்டும் உழைப்பு வியக்கத் தக்கது. ஒவ்வொரு கட்டுரையையும் பன்முறை எழுதி சிறபச் செதுக்குப் பணிபோல் ஆலாபனை புரிந்து தேர்ந்த இசைக் கலைஞராய் கவனமான காலப்ரமாணங்களுடன் அமைப்பார். பல முறை எழுதி படிஎடுத்து அதனைத் தட்டச்சு செய்து மறுபடிப்படித்து மறுபடித் திருத்தி அவர் பத்திரிக்கைகளுக்கு அனுப்பும் பாங்கு வியப்புத் தரும் உழைப்பாகவே எனக்குத் தோன்றும். இவரது குழந்தைகளும் இவர் போலவே தந்தையின் பணியை வியப்புடன் பார்த்துக் கொண்டிருப்பார்கள். ஒவ்வொரு கட்டுரையையும் ஒவ்வொரு கலைஞரிடமோ அலுவலக ஊழியரிடமோ சிற்பிகளிடமோ கொடுத்துப் படித்துப் பார்க்கச்சொல்லி அதன் உண்மை நிலையை பல கலைஞர் வாயிலாய் அறிந்து திருப்தியான பின்னரே உரிய இலக்கிய ஏடுகளுக்கு அனுப்பிவைப்பதை நான் கண்கூடாகக் கண்டிருக்கிறேன். இவ்விதமான

 ஆத்மார்த்தமான உழைப்பை ஒரு வரப்பிரசாத

Koviloor Digital Library

மாகவே கருதவேண்டும். ஏனெனில் இன்று நம்மில் பலரும் உழைப்பில் நம்பிக்கை அற்றவர்களாகவே இருக்கிறோம்.

தேநுகாவின் கட்டுரைகள் ஒரே நேரத்தில் அறிமுக மாகவும், விஷய நூதனம் கொண்டவையாகவும், இலக்கியச் சிறப்புடையதாகவும் இன்னும் பல்துறை மேதைமை கொண்டதாகவும் இருப்பது சிறப்பென்று பல அறிஞரும் பாராட்டுவதை யானறிவேன். இவை எல்லாவற்றையும் விடப் பெருஞ்சிறப்பு அவற்றின் சுருக்கமான அடக்கம்தான் என்று எனக்குத் தோன்றுகிறது. உதாரணத்துக்கு இந்த வித்யா ஷங்கர் ஸ்தபதியின் நூலையே எடுத்துக் கொள்ளலாம். சுருங்கச் சில சொல்லி உள்ளில் பல விரிக்கும் இத்திறம் சிறந்த இலக்கிய நயமாகும். **வித்யாஷங்கர் ஸ்தபதி பற்றிய சொற்சிற்பமாகவே இதனை நான் மதிக்கிறேன்.**

தேநுகா தமிழின் கலைஞர்களை முதன் முதலாக இனம் காட்டுவது மட்டுமல்ல, அவர்களை இலக்கியமாக்குவதுமட்டுமல்ல; மிகவும்ஆழ்ந்த ஆனால் சுருக்கமாக விமர்சிக்கவும் செய்கிறார் என்பது அற்புத நயமாகும். வித்யாஷங்கரின் வாழ்வு – அவரது பூர்வோத்திரம்; அவரது கலைச்சூழல்; அவரது சிற்பங்களில் அர்த்தங்கள் பொதிந்த விவரணம்; அவர் சிற்பங்களைப் பற்றிய நுண்மையான கருத்து–இவையாவையும் எத்தனை அழகாகச் சொல்லிவிட்டார் தேநுகா;

Koviloor Digital Library

இது போன்றதொரு சுருக்கமான நூல் தமிழில் நான் கண்டதில்லை. ஒரு சிற்பிக்கும் தமிழில் நேர்ந்துள்ள இந்த மரியாதையும் கௌரவமும் இன்னும் பலருக்கும் கிடைக்கும் வண்ணம் தேநுகாவிடம் ஏராளமாகக் கலைப்பொருட்கள் வெளிவரக் காத்துக் கொண்டு இருக்கின்றன என்பதை நான் அறிவேன். "தமிழர்கள் பாக்கியசாலிகள். ஆனால் அவர்களுக்கு தங்கள் பாக்கியத்தை அறிந்துகொள்ளத் தான் அறிவோ, திறமோ போதுவதில்லை" என்பார் க.நா.சு.

தேநுகா இந்தியா முழுவதும் உள்ள கலைச் செல்வங்களை எல்லாம் பள்ளிப் பருவத்தில் இருந்து இன்று வங்கி ஊழியராகப் பணிபுரியும் இந்தக் காலம் வரை ஓய்வு கிடைக்கும் பொழுதெல்லாம் எங்காவது ஒரு கலைக்கோவிலில் தான் இவரைக் காணலாம். ஒவ்வொரு கலைப் படைப்பைப் பற்றிய இவரது அபிப்ராயமும் வினோதமாகவும் யாரும் காணாத புது வகை காண்பதாகவும் இருக்கும். சமாந்தரக் கலைகளையும் அவர்களைப் படைக்கும் கலைஞர்களையும் நேரில் சென்று பார்த்து பாராட்டுவது - உதவி வழங்குவது - துணை நிற்பது போன்ற காரியங்களில் எப்போதும் தளராத ஊக்கமுடையவர். வாழ்வின் கலைஞர்களையும், வறுமைக்கோட்டிற்குத் கீழ் புதைந்து கொண்டிருக்கும் பழம் எழுத்தாளர்களை

Koviloor Digital Library

யும், இருட்டில் கிடக்கும் இளைய தலைமுறைஎழுத் தாளர்களையும் வெளிச்சத்துக்கு அழைத்து வந்து பின் ஆறுதல் செய்யும் அரும் பண்பும் தேநுகா அவர் களின் சிறந்த மனிதாபிமானமாகும். இவரது இள கிய கலை உள்ளத்தால் நிறைய பேருக்கு உதவியும் இதே உதவும் குணத்தால் நிறைய பேர் இவரை ஏமாற்றியும் இருக்கிறார்கள். இதையும் சிறப்பாகவே இங்கு கூறுகிறேன்.

கலைஞனின்கவியுள்ளத்தால்சிறந்தும், அனுபவத்தால் நறுங்குணமும் அறிஞர்தம் தொடர்பால் விழிப்புற் றும் மீண்டும் படைப்புத் திறத்தால் மறுபடியும்கலை ஞனாகவே ஆகிறவர் செல்வர் தேநுகா. வங்கிப்பணி யிலும் மற்றும் பிற பணிகளிலும் அவர் சிறந்த உதவி செய்யும் மனிதராகத் துலங்கி வருகிறார். கும்ப கோணத்தில் இவரது இல்லமே ஒரு கலை இல்ல மாகப் படைக்கப்பட வேண்டும் என்பது இவரது அவா. அதற்குத்தக்க கலை இல்லம் ஒன்றை அதற் கான பாங்குதவி தேடிவருகிறார்.

ஸ்ரீ தேநுகா அவர்கள் நீண்டகாலம் கும்பகோணத் தில் உள்ள ஓவியக் கலைஞர்களுக்கு நண்பனாகவே விளங்கி வருகிறார். இவரது நண்பர்கள் யாவரும் சிறந்த எழுத்தாளர்களும், அரிய சிற்பக் கலைஞர் களும் ஆவார்கள். இவரது ஓவிய ஈடுபாட்டால் இவர் ஒரு பெரிய ஓவிய சேகரத்தைச் சேர்ந்திருக்க

Koviloor Digital Library

இராவணன்
கோட்டோவியம்
இந்தியன் இங்க்



Koviloor Digital Library

லாம். ஆனால் இவரது நோக்கம் ஓவியங்களைச் சேக ரிப்பதல்ல. அனுதினமும் புதிய ஓவியங்களைத் துய்ப் பது மட்டுமே. இவர் மனதில் வைத்திருக்கும் ஓவிய சேகரம் அத்தனை பெரியது. தஞ்சையில் நிகழும் **சும்மா இலக்கியக்** கும்பலினரின் இலக்கியக் கூட்டங் களில் இவரும் இவரது நண்பர்களான ஓவியக் கலை ஞர்களும் சிற்பக் கலைஞர்களும் வந்து கலந்து கொண்டு அரிய உரைகளை நிகழ்த்துவார்கள். ஓவி யர்களைப் பற்றி சாதாரண மக்களும் புரிந்து கொள் ளும் விதமாக அரிய சொற்பொழிவுகளை இவர்கள் நிகழ்த்தி உள்ளனர். இவரை நான் முதன்முதலில் ஒரு எழுத்தாள நண்பர் கவிஞர் பொன். தனசேகரன் அவர்களுடன் திடீரென்று தஞ்சை வந்து என்னை ஒரு படைப்பாளி என்கிற நிலையில் சந்தித்தபோது எனக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. காரணம் என் படைப்புகள் மீது எனக்கு அத்தனை பெரிய அபிப்ராயங்கள் ஒன்றும் இருந்ததில்லை. அவரும் என் படைப்புகளைப் பற்றி அதிகம் பாராட்டவில்லை. மிகவும் அடக்கமான குரலில் "உங்கக் கதைகளை படித்திருக்கிறேன். ரொம்ப நல்லாயிருக்கு. எனக்கு பிடிச்சிருக்கு" என்று மிக எளிய வார்த்தைகளில் சொன்னபோது அவற்றின் ஆடம்பரமற்ற அழகு நிஜம் என்னை அவரைப் புரிந்துகொள்ள வைத்தது. அதன் பின்னர் தஞ்சையில் பல இலக்கியக் கூட்டங்

Koviloor Digital Library

களில் அவரைச் சந்தித்திருக்கிறேன். எங்கும் சாதாரண பதஷ்டமில்லாத நல்ல மனிதராகவே எனக்குக் காட்சி யளித்தார். அவர் பழகத் தெரிந்தவர். பழகும் முறையைச் கலையாக கற்றவர். அவரது எழுத்தாளக் நண்பர்களிடமிருந்து வங்கி ஊழியர் தொடக்க நிலை வரை யார் மனமும் கோணாது நடக்கத் தெரிந்த வர். இதனை "Behaviour Science" என்பார்கள். இதன் மூலமாக இவரது கட்டுரைகளும் புது வடிவங் களை எய்தியிருக்கிறது, என்பதைச் சொல்லவே தேநு காவைப் பற்றியும் அவரது தனி குணங்களைப் பற்றி யும் கூறலானேன்.

தேநுகா எழுதி உள்ள வித்யாஷங்கர் ஸ்தபதி அவர் களும் தேநுகாவைப் போல் இனிய குணங்களைக் கொண்டவரேயாம். ஓவியக் கலைக் கல்லூரியில் பணி புரியும் எல்லா ஆசிரியக் கலைஞர்களும் தேநுகாவின் நண்பர்களே. எனவே இவர் யாரிடமும் முகங் கோணாது அபிப்ராயங்களை வாங்கி விடும் திறமை யும் தேநுகாவுக்கு உண்டு. என்னைச் சந்தித்தபோது குறுகிய காலத்திலேயே அவர் என் மனம் கவர்ந்த வர். தேநுகாவினால் எனக்குப் பல அரிய நண்பர்கள் வாய்த்தனர். எங்களது சந்திப்பு தஞ்சையிலும், குடந் தையிலும் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டு இருக் கின்றன. ஓவியத்துறையிலும் சிற்பத்துறையிலும் என்னை எழுத ஊக்குவித்தவர்கள் தேநுகாவும் வித்யாஷங்கர் ஸ்தபதியும் ஆவார்.

Koviloor Digital Library

வித்யாஷங்கர் ஸ்தபதியின் நட்பின் மூலம் நான் ஓவியக் கலைஞர்களின் கூடும் இந்திய முகத்தைச் சந்தித்தேன். தேநுகாவின் மூலம் ஓவியர்களின் சிற்பங்களில் விமர்சன ரீதியான அழகினைக் கற்றுக்கொண்டேன். வாழ்வில் இவர்கள் இருவருமே தங்களைக் கலைஞர்களாக நிரூபித்ததைத் தான் இந்த நூலாக நீங்கள் காண்கிறீர்கள். இருவரது கலைத் திறமையும் தமிழுக்கு நம்பிக்கை தந்திருக்கிறது. ஆனால் வித்யாஷங்கரின் சிற்பம் அவரது கலை தேநுகாவால் தமிழாக்கப்பட்டு பொலிந்துள்ளது.

கடைசியாக,

வித்யாஷங்கரைப் பற்றி தேநுகா எழுதிய இந்தப் புத்தகத்தை தமிழ் கூறும் நல்லுலகத்துக்கு அறிமுகப் படுத்தும் இந்த கணத்தில் இவை யாவும் நீங்கள் ஒவ்வொருவரும் தான் தனது தனி உணர்வுகளால் தாங்களாகவே சென்றடையவேண்டிய தனி உலகங்களான கலைப் படைப்புகளாகும். வாசகர் ஒவ்வொருவரும் நேரடியாகவே வித்யாஷங்கர் ஸ்தபதியை நான் மேற் கூறி வந்த யாவும் வெறும் தூண்டுதலாகவே அமையும் என்பதை நான் நன்கறிவேன்.எனவே வித்யாஷங்கர் ஸ்தபதியின் படைப்புகளை நீங்கள் சென்று அடையும்போது நான் கூறிவந்தகருத்துக்கள் யாவும் அக்கணமே மறைந்து ஒழிந்து வேறு ஒரு புது உலகத்தையே உங்களுக்கு அறிமுகம் செய்விக்குமா

Koviloor Digital Library

னால் வித்யாஷங்கர் ஸ்தபதியின் கலைஉலகு வள முடையதென்று நீங்கள் அறிந்துகொள்ளலாம்.

வித்யாஷங்கர் ஸ்தபதியின் சிற்ப உலகை தேநுகா அவர்கள் வித்யாஷங்கர் ஸ்தபதியின் சிற்பமொழி என்று வரையறுக்கிறார். நாம் தேநுகா அவர்களின் மொழியை கலை உலகின் புது மொழியாகவே உறுதி செய்கிறோம். காண்பதும், காண்பதில் இழைவதும், இழைவதில் லயிப்பதும், லயிப்பதில் புது உலகம் காண்பதுவுமேயன்றி கலையில் வேறெனன் இருக்கிறது? நிறைந்த மனங்களுடன் உங்களிடமிருந்தும் உங்களை வெளிப்படுத்தும் தேநுகாவின் நயங்களிலிருந்தும் வித்யாஷங்கர் ஸ்தபதி அவர்களின் சிற்ப லாவண்யங்களிலிருந்தும் விடைபெற்று உங்களை உலகங்களுக்குள் அவர்களைக் கண்ட திருப்தியுடனும் வாசகர்களாகிய உங்களை மன மொழி மெய்களால் வாழ்த்தி விடைபெறுகிறேன்.

Koviloor Digital Library

வித்யாசங்கர் ஸ்தபதியின் சிற்பமொழி

தத்ரூபங்களை சிற்பங்களால்தான் வடிக்க முடியும். ஓவியங்கள் வடிப்பது வெறும் மாயையே. சிற்பமெனும் இத்தத்ரூபங்களையே சுற்றிச்சுற்றி வந்தது இந்தியக் கலைமனம். கண்ணால் கண்டும் கையால் தொட்டும் உணரக்கூடிய தத்ரூபங்களைக் கற்பனை நயத்தோடு மிக அழகாக வடித்தனர் சிற்பிகள். சிற்பிகளின் இவ்வழகின்ப உணர்வுகள்தாம் இந்தியச் சிற்ப சாஸ்திரங்களுக்கு அடிநாதமாய் விளங்கியது. பாறைகளை மலைகளை முறையாக உடைப்பதிலும் அவற்றைக் குடைவதிலும் உள்ள சிரமங்களையெல்லாம் பொருட்படுத்தாமல் சிற்பச் செதுக்கல் கலையிலேயே அண்டிவிட்ட இந்திய மனத்தின் ரகசிய பாவம் வேறொன்றுமில்லை. கற்பனை விரவியிட்ட முழுமையான அதன் முப்பரிமாணக் கலை அழகு வெளிப்பாடேயாகும்.

இந்தியச்சிற்பங்களின் இப்பேரழகை நிர்ணயிப்பது அதன் தசம (பத்து) தால அளவுகளேயாகும். வரம்பிற்கும் வாதப் பிரதிவாதங்கட்கும், எந்திர ரீதியாகவும், தந்திர ரீதியாகவும் சாஸ்திரவழியிலும் தம்மை உட்படுத்திக் கொண்ட இச்சிற்பங்களின் இவ்வழகுணர்வை நிர்ணயிப்பது இத்தசம தால அளவுகளேயாகும். குதிரை முகமுடைய கின்னரர்களாகட்டும்; சிங்க முகமுடைய கிம்புருடர்கள் மற்றும் பூத கணங்

Koviloor Digital Library

களாகட்டும் இவர்களின் கொட்டு முழக்கையும், மத்தள ஒலியையும் கூட இச்சிற்பிகள் தம் மூன்றுதால அளவுகளுக்குள்ளேயே கொண்டுவந்து விடுகின்றனர். குப்ஜர்களை இவர்தம் கூனல் முதுகுடன் ஆறுதால அளவில் எப்படியோ கொண்டுவந்து விடுகின்றனர் இவர்கள். வாமனர்கள் என்னும் குள்ளர்களோ ஐந்து தாலத்தில் இவர்களிடம் அடங்கிவிடுகின்றனர். பிரும்மா, விஷ்ணு, மகேஸ்வரன் போன்ற உத்தமர்களைக்கூட இச்சிற்பாச்சாரியர்கள் தம் தசமதால அளவுகளுக்குள்ளேயே எப்படியோ அடக்கி ஒடுக்கி விட முடிகிறது. மாநாங்குளம், மாத்திராங்குளம், தேஹலப்தாங்குளம் என்றெல்லாம் அங்குள அளவுக் கூறுகளாகப் பிரிந்துவிடும் இச்சிற்பங்கள், மத்தியமம் என்றும் உத்தமம் என்றும் மற்றும் இவர்தம் அதம தச தால அளவுகளுக்குள்ளேயே அழகழகாக உருக் கொண்டு விடுகின்றன. இத்தால அளவுகளுக்குள் ளேயே வளைந்து வளைந்து அழகாக நெளிந்து நெளிந்து உயிர்பெறும் இந்தியச் சிற்ப அழகை ஒரு கலை அதிசயம் என்றே எண்ணத் தோன்றுகிறது.

புராதன இந்தியச் சிற்பமரபின் திசையைச் சற்று திருப்பிவிடக்கூடியன நவீனச் சிற்பங்களாகும். சிற்பங்களுக்கான மரபார்ந்த அழகுணர்வை எப்படியோ ஒட்டுமொத்தமாக உள்வாங்கிக் கொண்டவை நவீன சிற்பங்களாகும். நவீன சிற்பங்களோ உருவங்களாய் அருவங்களாய், உருவஅருவங்களாய், உருவங்கள்

Koviloor Digital Library

சிதைந்தும் சேர்ந்தும், பின் உருமாறியும் தோற்றம் கொண்டு உணர்வுகளின் வெளிப்பாட்டைப் பிரதான நோக்கமாய்க்கொண்டு திரிபவை. எந்தவித எல்லைகளுக்குள்ளும் அடங்க மறுப்பவை நவீனச் சிற்பங்க

Koviloor Digital Library

மங்கை
கோட்டோவியம்
இந்தியன் இங்க்



ளாகும். எவ்வித தசம தால அளவுகளும் நவீன சிற்பங்களைக் கட்டுப்படுத்த முடியாது. நவீன சிற்பி களோ, பஞ்சகச்சை உத்தரீயம் காதில் கர்ணகுண்ட

57 லத்துடன் காட்சியளிக்கும் சிற்பாச்சாரியார்

Koviloor Digital Library

களாகவும் இல்லை. வேதங்களின் சாரமும் மந்திர தந்திரங்களும் தெரிந்தவராக இருக்க வேண்டும் என்ற விதியும் இவருக்கு இல்லை. இவரின் படைப்புப் பொருள்களுக்கென்று எவ்வித கல்யாணகுண விசேஷங்கள் இருந்தாக வேண்டும் என்ற விதியும் இல்லை. நவீன சிற்பிகளுக்கு எப்பொருளும் சிற்பப் பொருளாகலாம். காற்றாலும் நீராலும் மழையாலும் பல்வேறு வண்ணங்களையும் வடிவங்களையும் பெறும் கூழாங்கற்கள்கூட இவர்களது சிற்பக் கலைப் பொருட்கள் ஆகலாம். இவற்றின் பருப்பொருள் உண்மையைத் (objective reality) தாண்டி கருத்தமைவான உண்மையைத் (abstract reality) தேடுவதிலேயே நவீன சிற்பிகள் நாட்டம்கொண்டுள்ளனர்.

இன்றைய அறிவியல் தரும் அனைத்து வசதிகளையும் பெற்றுக் கொண்டு உருவமாய் அருவமாய் உருவ அருவமாய், ஜியோமிதிக் கோளங்களாய் கூம்புகளாய் பல்வேறு வடிவங்களைப் பெற்றுவிடுகின்றன நவீன சிற்பங்கள். பார்க்கும் பொருள்களின் கருத்தமைவான உண்மையைத் தேடும் இச்சிற்பங்கள் வெளிப்பாட்டில் குறியீடாய் (Symbolistic), மீமெய்யிமாய் (Surrealistic), வெளிப்பாட்டியமாய் (Expressionistic), உணர்வு ரீதியான அறிவுரீதியான கருத்தமைவாய் (Emotional and rational abstractionistic) புதுத்தோற்றம் கொண்டு நிற்கின்றன. நவீன சிற்பிகளுள் குறிப்பிடத்தக்கவர்கள் **ஹென்றி மூர்** (Hendry Moore), **ரோதோன்** (Rodon), **பிரான்குசி** (Bronkuchi), மற்றும் தற்போது அமெரிக்காவில் வாழ்ந்து வரும்

Koviloor Digital Library

இசமுநாகுசி (Isamu Nakuchi), **டேவிட் ஸ்மித்** (David Smith), **அலெக்சாண்டர் கால்டர்** (Alexander Calder), **சேம்பர்லின்** (Chamberline) போன்றோர் ஆவார் கள். ஓவியத்தில் சிற்ப இணைப்பைச் (Collaige Sculp ture) சேர்த்து நவீன சர்ரியலிச ஓவியங்களைப் படைத்த **மாக்ஸ் ஏனிஸ்டின்** (Max Ernst) நவீன உத்தி ஓவியத்திற்கான புதிய சிற்பத்தளத்தை உரு வாக்க வல்லதாகும்.

மரபார்ந்த நம் இந்தியச் சிற்பவழிக்கு நவீனமுகம் அளிப்பதோ சற்றுக் கடினமான படைப்பியல் சாத்தி யமே. இவ்வழியே இருபத்தைந்து ஆண்டுகளாக உழைத்து உருத்தேறியவர் சிற்பி வித்யாசங்கர் ஸ்த பதி. புராதன இந்தியப் பெருவாழ்வை அதன் ரமணீ கரத்தை நவீன சிற்பங்களாகப் படைக்கவேண்டும் என்ற துடிப்புடன் இருப்பவர் வித்யாசங்கர் ஸ்தபதி. தனது தந்தையான புகழ்பெற்ற சிற்பி **கௌரிசங்கர் முதபதியின்** கிரந்த சாஸ்திர ரீதியான சிற்பவழி தான் இவரை நம் இந்திய மரபை உற்று நோக்க வைத்தது எனலாம்.

தாம் பிறந்து வளர்ந்த ஊரான ஸ்ரீரங்கக் கோவில் சூழலும் இவரது பால்ய காலந்தொட்டே இவரது மனதுள் மரபுக்கோலமிட்டுக் கொண்டிருந்தது. ஸ்ரீரங்கம் சேஷராய மண்டபத்தில் ஓடித்திரிந்த காலங்களை நினைவுகூறும்போது, "கடிவாளம் வார்ப்பட்டை முதலிய சோடச அலங்காரங்களுடன் பல் எகிறு தெரியக்கனைத்து திமிரிப்பாயும் குதிரை கள் கற்சிலைகளாய் ஆனது எப்படி" என்று வியந்து

Koviloor Digital Library

ரசித்ததாகக் கூறுகிறார் வித்யாசங்கர் ஸ்தபதி. கோவிலுள் வாகனங்களும் வாரைகளும் வைக்கும் இடங்களெல்லாம் இவர் விளையாடும் இடங்களா யிருந்தன அப்போது. கருடவாகனம், கற்பக விருட்சவாகனம் தங்கத்தாலும் வெள்ளியாலும் செய்யப் பட்ட அன்னப்பக்ஷி வாகனங்கள், துணியால் போர்த்தி வைக் கப்பட்ட இவ்வாகனங்களின் இண்டு இடுக்குகளி லெல்லாம் தம் பால்ய நண்பர்களுடன் ஒளிந்து மறைந்து ஓடிவிளையாடினார் வித்யாசங் கர். வைகுண்ட ஏகாதசியின் இராப்பத்து பகல் பத்து காலங்களின்போது உற்சவ பெருமாள் சுவாமி யைச் சீமான் தாங்கிகள் தூக்கி வருவர். சாத்தானி யர்களோ பெருமாள் வீதி உலாப் புறப்பாட்டிற் கான பராக் கூறிடுவர். பன்னீர், சந்தனம், பச்சைக் கற்பூரம் இவற்றின் சுகந்த நறுமணம் கமழ சிம்ம நடையிட்டும், கஜ நடையிட்டும், சர்ப்ப நடையிட்டும், ராஜநடையிட்டும் பவனிவரும் சுவாமி யின் வையாளிப்பேரழகில் மனதைப் பறிகொடுத்தார் இவர். வீதி உலாவின்போது தாங்கிட தோம், தாங் கிட தோம் என்று அலற்றி அடிக்கப்படும் சுத்தி மத் தளம். எக்காளம், சந்திரவளையம், டவுண்டி முதலிய இசைக்கருவிகளின் ஓசையுடனும், திமிறி நாதஸ்வரத் தின் கம்பீர நாட்டை, திரிபுடைதால மல்லாறி இவற் றில் எல்லாம் மனம் லயித்தார் வித்யாசங்கர்.

பிற்காலங்களில் தம் உறவினர்களோடு வாழ்ந்த சுவாமிமலைச் சூழலும் வித்யாசங்கர் ஸ்தபதிக்கு மிக வும் ரம்மியமாகவே அமைந்தது. சுவாமிமலையில்

Koviloor Digital Library

வாழ்ந்த இவர்தம் உறவினர்கள் அனைவரும் சிற்ப நேர்த்தியறிந்த ஸ்தபதிகளாய் இருந்தனர்.. இவர்கள் கற்சிலை செய்யும் ஸ்தபதிகளாய் இருந்தனர். ஆகம விதிப்படி கோவில் கட்டிட வேலை செய்தும் வாழ்ந்து வந்தனர். இவர்கள் செம்பொன்னாலும் ஐம்பொன்னாலும் செய்யப்பட்ட சிலைகளோடுதான் இவர்களது வாழ்க்கை இனிது நடந்து வந்தது. இவர்களது வீட்டுத் தாழ்வாரங்கள், திண்ணை, முற்றம் மற்றும் ரேழிகளெல்லாம் அங்கங்கே சிலைகள் கிடக்கும். முழுதுமாயும் அரையுங் குறையுமாயும் செதுக்கப்பட்டிருக்கும் இச்சிலைகள், மெழுகின் வார்ப்பின் போதே உருக்கொண்டுவிடுகின்றன. தண்ணீர் நிரம்பியுள்ள வெண்கலப் பாத்திரங்களில் எல்லாம் மெழுகின் வார்ப்பாய் இச்சிலைகள் மிதந்து கொண்டிருக்கும். அம்மன்களின் சில அபய ஹஸ்தங்களும், சின்முத்திரைக் கைகளும் இவற்றுடன் மிதந்து கொண்டிருக்கும். சில அர்த்த நாரீஸ்வரர்கள் தம் ஒற்றைத் தனத்தை பிதுக்கித்கொண்டு முற்றத்து வெய்யிலில் மல்லாந்து கிடப்பர். பீடத்தின் மீது ஒற்றைக்காலைத் தூக்கி ஆடும் நடராஜர் சிலை உளிகளால் செதுக்கப்படுவதற்காக மரக்கட்டையின் மீது சாத்திவைக்கப்பட்டிருக்கும். ரிஷப தேவர் சிலை ஒன்று தன் நாகபந்தன தலைக்கட்டுடன் ரிஷபத்தை அரவணைத்தத் தோற்றத்துடன் மெருகேற்றப்படுவதற்காக வாசலில் நிமிர்த்தப்பட்டிருக்கும். வீட்டுக்

Koviloor Digital Library

கொல்லையில் திரிசூல உருவம் அமைத்த மண் குகை களில் ஐம்பொன்னை உருக்கி அதன் செந்தணற் குழம்பை அக்குகைக் கூட்டில் ஊற்றும் போதே சில பிட்சாடனர்கள் அம்மணமாய் உருக்கொண்டு விடு வர். நெருப்பு இவர்களிடம் நீர் போல் குழம்பாய் வளைந்து கொடுக்கும். இவ்வகையான விக்ரகச்சூழ லில் வளர்ந்தவர் வித்யாசங்கர். சுவாமிமலை ஸ்ரீரங்க சிற்பச் சூழல்களும் தம் தந்தையான சிற்பி கௌரி சங்கர் ஸ்தபதியின் வழித் தாம்பெற்ற மரபுச் சூழலும் வித்யாசங்கரின் சிற்ப உலகிற்கு நல்வழி அமைத்து தந்தன. இவ்வுந்து சக்தியால் 1962 இல் சென்னை ஓவி யக்கல்லூரியில் மாணவரானார். ஓவியக்கல்லூரியில் நவீன சிற்பங்கள் இவர் மனதை வெகுவாகக் கவர்ந்த போதும் மரபு இவரிடமிருந்து விடைபெற்றுக் கொள்ளவில்லை. இந்நாட்களில் தான் **கிராமப்பெண், பானை ஏந்திய பெண், குமுறி அழும் பெண்,** போன்ற சிற்பங்கள் பல படைத்தார் இவர். இச் சிற்பங்கள் மேற்கத்தியச் சிற்பவழியில் அமைக்கப் பட்டிருந்தாலும் இந்திய மரபார்ந்த வெளிப்பாட் டைக் கொண்டிருந்தன. வித்யாசங்கரின் ஆசிரியர் களான பணிக்கர், தனபால் போன்றோர் இச்சிற்பங் களை வியந்து பாராட்டினர். இச்சிற்பங்கள் உலோ கத்தாலான புடைப்புச் சிற்பங்களாகும். இப்புடைப் புச் சிற்பங்கள் முழுமையான முப்பரிமாணம் கொண்

Koviloor Digital Library

டவையல்ல. இருப்பினும் இப்புடைப்புச் சிற்பங்கள் தம் அரைவடிவ வெளிப்பாட்டிலேயே சிற்பத்திற் கான முப்பரிமாணமாயத் தோற்றத்தையும் கொண்டிருந் தன. இப்புடைப்புச் சிற்பங்களைக் கண்டு ஆசிரியர் கள் வியந்தனர். இவ்வகையான உலோக புடைப்புச் சிற்பங்களில்தான் லாவகமாகத் தன் சிற்ப நேர்த் தியை வெளிப்படுத்த முடியும் என்று கருதினார் சிற்பி வித்யாசங்கர் ஸ்தபதி. பின்னர் புடைப்புச் சிற் பங்களே இவரது சிற்பக் கலைவழி ஆயிற்று.

பின்னாட்களில் கும்பகோணம் ஓவியக் கலைக்கல்லூரி யில் பணியாற்றியபோது, ஓவியர் திரு சீனிவாசலு வின் மரபார்ந்த நவீன ஓவியங்களுள் மனம் லயித்தார் இவர். அப்போது தம் சிற்ப உருவங்களின் இணைப் பிலும் (composition) உருவத்திலும் (form) நவீனத்துவத்தை கொண்டுவர முயன்றார் வித்யா சங்கர். இக்காலங்களின்தான் **இரதிதேவி, விநாயகர், கௌமாரா, இராவணா, வேணுகோபாலா, இரண்யவ தம்** போன்ற மரபார்ந்த நவீன புடைப்புச் சிற்பங் களைப் படைத்தார். இச்சிற்பங்கள் மரபின் சார மாய் இருந்த போதிலும் உருவ அமைப்பில் நவீனத் தோற்றம் கொண்டிருந்தன. இவ்வழியில் ஐம்பொன் னால் செய்யப்பட்ட **காரைக்கால் அம்மையார்** எனும் சிற்பம் மரபின் நவீனப்பிழியல் என்றே சொல்ல வேண்டும்.

பின்னாட்களில் தமிழகத்தின் கிராமீய சூழல் இவரது மனதை ஆட்கொண்டது; கிராமங்களில் நடைபெறும் காவடிஆட்டம், கரகாட்டம். நையாண்டி மேளம், பொய்க்கால் குதிரை முதலியவற்றுள் எல்லாம் அதிலாபிரியம் கொண்டிருந்தார் இவர். இக்காலங் களில் தன் கால்களில் சலங்கை கட்டிக்கொண்டு ஜதி யோடு சதிராடவும் கற்றிருந்தார் இவர். உடுக்கு, ஜண்டை, கவண்டை, சங்கு இவை எழுப்பும் ஒலிக ளெல்லாம் இவருக்கு அப்போது விருப்பமாயிருந்தன. கிரா மீயப் பேரழகின் மீது இவர் கொண்ட கவனம் படைப்பு வழியில் இவருக்குப் பெரிதும் உதவின. கிராமங்களில் தோன்றும் முனீஸ்வரன், ஐயனார் யானைக்குதிரைகள் போன்ற சுடுமண் சிற்ப நேர்த் தியை வியந்து ரசித்தார் வித்யாசங்கர் ஸ்தபதி. இக்கிராமீயச் சிலைகளுக்கு அளவுகள் முக்கியமற்று இருந்தன. கைவினை வசதிகளே முக்கியமாகக் கொண்டனர் இக்கைவினைஞர்கள். பிரும்மாண்ட மான முனீஸ்வரன் சிலையின் கைகளை நீட்ட முடிய வில்லை என்றால் இக்கைவினைஞர்கள் அதற்காகக் கவலைப்பட்டு கொண்டிருப்பதில்லை. முனீஸ்வரனின் அவ்விரண்டு கைகளையும் தோளின் இருபுறமும் சேர்த்து இருத்திவிடுவர். இம்முனீஸ்வரனின் கண்கள் அளவுக்கு மீறிச் சற்று அதிகமாகவே உருவாக்கப்பட் டிருக்கும். நிலாஒளி இல்லாத இராக்காலங்களில் இம்முனீஸ்வரன் பார்ப்பதற்கு அக்காடுகளில் சற்று

Koviloor Digital Library

காவடியாட்டம்
கோட்டோவியம்
இந்தியன் இங்க்

Koviloor Digital Library

மாரிக்கடவுள்
கோட்டோவியம்
இந்தியன் இங்க்



Koviloor Digital Library

பயமாகவே இருக்கும். தனது புடைப்புச் சிற்பங்களான **முனீஸ்வரன், ஐயனார், கிராமதேவதை, பாம்பாட்டி, கரகாட்டம்** போன்றவற்றை இக் கிராமீயக் கைவினை வழியிலேயே நவீனத்துவம் தோன்றப் படைத்தார் சிற்பி வித்யாசங்கர் ஸ்தபதி. கிராமீய வழியைக் கொண்டு நவீன ஓவியங்களைப் படைத்த இந்தியருள் **ஜாமினிராய்** குறிப்பிடத்தக்கவராவர். இவரது ஓவியங்களுள் கிராமியத் தெய்வங்களெல்லாம் தட்டையாக்கப்பட்டு நவீனத் தோற்றம் கொண்டுவிடுகின்றன. இவர்போல் கிராமீய வழியில் அழகழகான நவீன புடைப்புச் சிற்பங்களைப் படைத்தவர் சிற்பி வித்யாசங்கர் ஸ்தபதி. **மாரிக்கடவுள்** எனும் இவருடைய சிற்பம் கிராமீயத் தன்மை வாய்ந்ததாகும். இச்சிற்பம் வித்யாசங்கரின் முந்தைய புடைப்புச் சிற்பங்கள் போல் இல்லாமல் முழுமையான முப்பரிமாண உண்மைத் தோற்றத்துடன் விளங்குகிறது. இச்சிற்பம் தற்போது தஞ்சைப் பல்கலைக்கழக அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. இதில் மழைக்கடவுளான ரேணுகா தேவியின் தலை ஒன்று வேப்பமரத்து மேடை ஒன்றில் வெட்டி வைக்கப்பட்டது போல் தோன்றுகிறது. இவ்வம்மனின் தலைக்கருகில் இரண்டு பக்கமும் இரண்டிரண்டு கைகள். வேப்பமரம் ஒவ்வொரு கிளைகளாகப் பிரிந்து ஒவ்வொரு திசையிலும் நீட்டி நெளித்துக்

Koviloor Digital Library

கொண்டிருக்கவில்லை. மாறாக அரைப்பந்து வடிவத்தில் கவிழ்ந்து கொண்டிருக்கிறது. மரத்தருகே தாறுமாறான திசைகளில் சூலங்கள் நீட்டிக் கொண்டிருக்கின்றன. காவிரிப்படுகையில் அமைந்த கிராமச்சூழல்களை மனதிற்குக் கொண்டுவரும்படியாக அமைந்திருக்கும் இச்சிற்பம் போன்று பல படைத்தார் வித்யாசங்கர் ஸ்தபதி. இதில் அதிக சாரமுள்ள ஆண் மரமான **அரச மரம்** ஒரு அற்புதச் சிற்பமாகியது. பின்னாட்களில் **கற்பகவிருட்ச** வரிசை ஒன்று செய்தார். கற்பக மரம் தன் கிளைகளை மூன்று வரிசைப்களில் கொண்டிருந்தது. இம்மரத்தின் இலைகளோ பெரும்பெரும் இலைகள். இப்பெரும் இலைகளுக்கிடையில் சின்னச்சின்ன இலைகள். இவ்விலைகளின் இடுக்குகளில் பல்வேறு பழவகைகள். அத்திபழம் என்றும் மாம்பழம் என்றும் சீத்தாப்பழம், பலாப்பழம் போன்ற பல்வேறு பழவகைகள் இவை. இப்பழங்களை நாடிவரும் பறவைகள் உயிரினங்கள் இவைகள் எல்லாம் அற்புதமான சிற்பங்களாகப் புடைக்கப்பட்டிருந்தன. மரத்தின் நடுத்தண்டிலோ ஐந்துதலை நாகம் ஒன்று மரத்தை மூன்று சுற்று சுற்றி வந்து தன் தலையை நீட்டிக்கொண்டிருக்கிறது. கற்பக மரத்தைச் சுற்றி மேடையின் நான்கு புறமும் நாக நடுகற்கள் நடப்பட்டுள்ளன. நினைத்ததை நினைத்தவுடன் வழங்கும் கற்பகமரம் இவ்

Koviloor Digital Library

வாறுதான் தோன்றுமோ என்ற ஐயத்தை எழுப்பும் ஜீவத்துவ சிற்ப மரங்கள் இவை.

வித்யாஷங்கர் ஸ்தபதி தற்போது யுவதி எனும் சுடுமண் சிற்ப வரிசைகளைப் படைத்து வருகிறார். இவை சுடுமண்ணிலும் (terracotta) விக்ரகங்களிலும் செய்யப்பட்டு வருகின்றன. இச்சிற்பம் பெண் எனும் உருவமாகவும் இதன் நடுவில் தீர்மானிக்க இயலாத அருவபாகமாகவும் தோன்றுகிறது. அருவ பாகத்தின் மீது தனியாகத் துண்டித்து வைக்கப்பட்ட அழகிய இளம் பெண்ணின் தலை ஒன்று அவ்வருபத்தோடு எப்படியோ இயல்பாகச் சேர்ந்துவிடுகிறது. பின்னர் தொடை கால்கள் நீட்டித்து தரையைத் தொடு கின்றன. இப்பெண் காதில் வளையமும், தலையில் நெற்றிச் சுட்டியும் அணிந்துள்ளாள். தலைக்குண் டான ஜடை அவ்வருப பாகத்தோடு பின்புறம் முத்துக் குஞ்சலங்களுடன் நெளிகிறது.

அரூப முன்பாகத்தில் கழுத்தைச் சுற்றித் தொங்கும் முத்துமாலை அவ்வரூபத்தின் இரண்டு தனமேடுகளைப் பிரித்துக் காண்பிப்பது போல் தோன்றுகிறது. துண் டித்து ஒட்டிவைக்கப்பட்டிருக்கும் கைத்துண்டு ஒன்று அவ்வெற்றிடத்தை நிரப்பி முழுமையான கையொன்று இருப்பது போலவே உணரச்செய்து விடுகிறது. மற் றொரு கை வளையல் அணிந்து மார்பகத்தைத்

Koviloor Digital Library

தொட்டுக்கொண்டுள்ளது. மெல்லிய உடை அணிந்த இப்பெண்ணின் கால்களில் தண்டைகள் அணிந்துள்ளாள். கைத்துண்டுகளின் இடை வெளியில் தோன்றும் மாயத்தோற்றம், வெட்டி வைக்கப்பட்டிருக்கும் தலை கைகள் உருவமாகவும் மற்ற இடையிட்ட பகுதிகளில் அருவமாகவும் ஒருவித அபேதவாகாய் அமைந்துள்ள இச்சிற்பம் ஓரளவிற்கு சர்ரியலிச, மேஜிக் ரியலிஸ சிற்பக் கூறுக்ளைக் கொண்டு சேர்ப்பதில் நவீனத்தோற்றம் கொள்கின்றன.

சுகாசினி எனும் இவரது சமீபத்தியச் சிற்பம் பார்ப்பவரை சுண்டி இழுக்கும் தன்மை கொண்டது. பல்வேறு யௌவனக் கனவுகளுடன் புன்சிரிப்பில் ஆழ்கிறாள், சாமுத்ரிகா லட்சணங்களைக் கொண்ட இப்பெண் தலையணையிட்டுப் படுத்திருக்கிறாள். துண்டித்து ஒட்டி வைக்கப்பட்ட இவள் கைகள் உடலின் பாகங்களாவது அதிசயிக்கத் தோன்றுகிறது. வித்யாஷங்கர் ஸ்தபதியின் சமீபத்திய **மிதுனா** (இணை) எனும் சிற்பம் கிராமீய ஆண்பெண் சேர்க்கையைக் காண்பிப்பதாகும். இளம் பெண் ஒருத்தியும் சுருள்முடி உடைய ஆடவன் ஒருவனும் ஒரு போர்வையில் தம் ஈருடலையும் கிடத்திச் சயனிக்க எத்தனித்த நிலை இங்கு சிற்பமாக்கப் பட்டுள்ளது. இப்பெண்ணின் தலையும் ஆணின் தலையும் போர்வைக்கு வெளியே நீட்டிக் கொண்டிருக்கும் கைகளும், கால்களும் ஐம்பொன்னால்

Koviloor Digital Library

வார்க்கப்பட்ட விக்ரக பாகங்களாகும். மற்றவை அனைத்தும் புடைக்கப்பட்ட உலோகத்தகடுகளாகும். நீண்ட மூக்கும் காதளவு ஓடிய கண்ணும் உடைய இப்பெண் நடுவகிடெடுத்து நெற்றிச்சுட்டி அணிந்துள்ளாள். முன் வகிடின் இருபுறமும் சூரிய சந்திரப் பிறைகள் தோன்றுகின்றன. வகிட்டின் பின் புறம் தலை உச்சியில் அழகிய ஜடைவில்லை பொருத்தப்பட்டுள்ளது. அதன் கீழ்புறம் ஜடையில் மூன்றுதலை நாகர். மூன்று திருகுவில்லைகளும் பட்டுமுத்துக்குஞ் சரமும் உள்ள ஜடை நுணி தலையணை மீது நெளிந்து கீழே தொங்குகிறது. கால்களில் தண்டைகளும் கைகளில் கடகமும் வளையல்களும் அணிந்துள்ளாள் இப்பெண். ஆடவனின் குறும்பான கால்களின் மேலீட்டால் இத்தண்டைகளும் கால்களும் மெலிந்து விடுகின்றன. வாலிபனின் இரண்டு கைகளின் அரவணைப்பால் அவள்தன் உடலும் கைகளும் சுதந்திரமற்று ஒடுங்கிவிடுகின்றன. இவர்களின் மீது போர்த்தப்பட்டுள்ள ஒற்றைப் போர்வை இவ்விருவர் உடல்களையும் தாண்டி மடிப்பு அலைகளாய்த் தரை வரை பரப்பிக் கொண்டிருக்கும் போதே இதனுள் இவ்விருவரது அம்மணத்தையும் குறிப்பாகத் தோன்றச்செய்து விடுகின்றது. கிராமீய ஆண்பெண் சேர்க்கையை மிக அழகாக எதார்த்தத்துடன் (realistic) வடித்தெடுக்கும் இச்சிற்பமொழியை வித்யாசங்கர் ஸ்தபதி எங்

Koviloor Digital Library

Koviloor Digital Library

கோபிகிருஷ்ணன்
கோட்டோவியம்
இந்தியன் இங்க்



Koviloor Digital Library

கிருந்து கற்றுக்கொண்டார் என்று அதிசயிக்கத் தோன்றுகிறது. கிராமிய மரபின் உண்மைப் பிழிவா கவே **மிதுனா** தோன்றுகிறது.

சாரஸ்வதீய சிற்ப சாஸ்திரம் எனும் நூல் சயனத் திற்கு முன் உள்ள சேர்க்கையை யோகம், சிருஷ்டி, போகம், சம்ஹாரம் என நால்வகைப் படுத்துகிறது. புத்தியைத் தருவதற்கும், முத்தியைத் தரு வதற்கும், விருத்தி மற்றும் அபிச்சாரத்தைத் தருவதற்குமான சயனங்களையும் சயனத்தின் முன் உள்ள சேர்க்கைகளையும், சயனத்திசை களையும் வரையறுத்துக் கூறுகின்றது இச்சிற்ப சாஸ்திர நூல். வித்யாசங்கர் ஸ்தபதியின் **மிதுனா** எனும் இச்சிற்பச் சயனம் எவ்வகைச் சயனமோ என்று மரபார்ந்த வழியிலேயே நம்மைச் சிந்திக்க வைக்கிறது இச்சிற்பம். கிராமியத்தை அதன் மர பார்ந்த வழியிலேயே இரண்டு பத்தாண்டுகளுக்கும் மேலாக த்ம் சிற்பங்களைச் செதுக்கிப் பழகியவர் சிற்பி வித்யாசங்கர் ஸ்தபதி. இதனால் இவரது சிற்பங்கள் பல்வேறு முத்திரை லட்சணங்களையும், பாவ பேதங்களையும் பெற்று அழகழகாக உயிர் பெற்றுவிடுகின்றன. நித்திய நைமித்திய கருமங் களுடன் சக்தி உபாசனை செய்து வரும் சாக்தரான வித்யாசங்கர் ஸ்தபதி தந்தகிரியையும் எந்திரவிதியும் சித்திர விதானமும் நேர்த்தியோடு செய்யும்

Koviloor Digital Library

வல்லமையுள்ள மரபுச்சிற்பி என்பது மட்டுமல்ல. இந்திய மரபின் பேரழகை கிராமிய வழியான அதன் ரமணீரகரத்தை தம் சிற்பங்களில் வடித்தெடுக்கும் போது தம் படைப்புகளுக்கு நவீன முகமளிக்கும் வல்லமையும் வாய்க்கப் பெற்ற நவீனச் சிற்பியுமா வார்.

Koviloor Digital Library

வித்யாசங்கர் ஸ்தபதியின் வாழ்க்கைக் குறிப்புகள்

1938

தமிழ்நாடு பொன்னமராவதி எனும் அழகிய நதிக்கரையில் அமைந்துள்ள கரூர் எனும் ஊரில் புகழ் பெற்ற சிற்பி திரு **கௌரிசங்கர் ஸ்தபதிக்கும்** திருமதி **சுந்தராம்பாள் அம்மையார்க்கும்** மூத்த மகனாய்ப் பிறந்தார். ஐப்பசித் திங்களில் கார்த்திகை விண்மீண் கூடிய திருநாளில் பிறந்தார் வித்யாசங்கர்.

இவரது தந்தையார் திரு கௌரிசங்கர் ஸ்தபதியும் தாத்தாவான திரு முத்துஸ்வாமி ஸ்தபதியும் அவர் தம் முன்னோர்களான துரைஸ்வாமி ஸ்தபதி, அண்ணாசாமி ஸ்தபதி, இராமசாமி ஸ்தபதி, சதாசிவ ஸ்தபதி போன்றோர்களெல்லாம் புகழ்பெற்ற சிற்பிகளான அகோர வீரபத்ர ஸ்தபதி, சுவாமிநாத ஸ்தபதி, முத்துசுவாமி ஸ்தபதி போன்ற தேர்ந்த சிற்பிகளின் வம்சாவளியாக சுவாமிமலை எனும் முருகன் திருத்தலத்தில் கற்சிற்பங்கள் செய்தும், விக்ரகங்கள் செய்தும் பல நூற்றாண்டுகளாகக் கலைத் தொண்டு புரிந்து வந்துள்ளனர். சுவாமிமலை திருக்கோவில் மேற்சுற்றுப் பிரகாரத்தில் அமைந்துள்ள இலட்சுமி, சரசுவதி ஒற்றைக்கற்சிற்பங்களை இவரது குடும்ப வம்சாவளியைச் சேர்ந்த திரு சதாசிவஸ்தபதி செய்ததாக செவிவழிச் செய்தியால் அறியப்படுகிறது.

Koviloor Digital Library

தந்தை கௌரிசங்கர் ஸ்தபதியும், தாத்தா வான முத்துசுவாமி ஸ்தபதியும் சுவாமிமலையைப் பூர்வீகமாகக்கொண்ட போதிலும் வாகனவேலைகள் செய்வதன் பொருட்டு திருச்சிராப்பள்ளி அருகில் உள்ள ஸ்ரீரங்கத்தைத் தன் வாழ்விடமாகக் கொண்டனர். ஸ்ரீரங்கம் சாத்தார வீட்டொன்றில் கௌரி சங்கர் ஸ்தபதி தன் குழந்தையான வித்யாசங்கருடன் வாழ்ந்து வந்தார். பிறகு அவ்வூர் தேவிதோட்டம் எனுமிடத்தில் இருந்த நவாப் ராஜமாணிக்கம் பிள்ளை வீட்டு வளமனையில் குடியிருந்து வந்தார். நாடகப் புகழ்பெற்ற நவாப் ராஜமாணிக்கம் பிள்ளை அவர்களின் குடும்பத்தினரும், கௌரிசங்கர் ஸ்தபதியின் குடும்பத்தினரும் மிக நெருங்கிய நட்புடன் கலை நேசங்கொண்டு வாழ்ந்துவந்தனர்.

1943

பள்ளிப் பிராயமடைந்த வித்யாஷங்கரை ஸ்ரீரங்கம் கொல்லும் பட்டறை வீதியில் உள்ள நகராட்சிப் பள்ளியில் முதல் வகுப்பில் சேர்த்தார் இவரது தந்தையார். பிராசீன பள்ளி சேர்ப்பு வைபவத்துடன் பள்ளியில் சேர்ந்தார் வித்யாஷங்கர். தரையில் மணல் பரப்பப்பட்டது. வித்யாஷங்கர் தன் ஆட்காட்டி விரலால் 'ஹரிநமோத்து சிந்தம்' என்றுசொல்லி அகரம் எழுத ஆரம்பித்தார். பிறகு ஒவ்வொரு ஆண்டும் தேர்வில்

Koviloor Digital Library

வெற்றி பெற்று அடுத்தடுத்த வகுப்புகளுக்குச் சென்றார்

1948

ஸ்ரீரங்கம் உயர்நிலைப் பள்ளியில் 6 ஆவது முதல் பள்ளியிறுதி வகுப்பு வரை பயின்றார். இக்காலம் இவரது கலைவாழ்வுக்கான அடித்தளங்களை அமைத்தது எனலாம். சங்கர், சங்கர்' என்று மாணவ நண்பர்களாலும், ஆசிரியர்களாலும்மிகஅன்போடு அழைக்கப்படும் வித்யாஷங்கர் பள்ளியில் பல நாடகங்களில் நடித்தார். அதில் ஒன்று **நல்லசிவம்** எனும் நாடகம். இந்நாடகத்தில் ஹீரோவாகவும், **கட்டபொம்மன்**, எனும் நாடகத்தில் துணைப்பாத்திரத்திலும் நடித்து எல்லோருடைய பாராட்டைப் பெற்றார் வித்யாஷங்கர். கவிஞர் வாலி, பைய்யு, எம்பார் விஜயராகவாச்சாரியாரின் மகன் வேதம் முதலியோர்கள் இவரது பால்யகால நாடக நடிகர்கள்.

ஸ்ரீரங்கவிலாசத்தில் உள்ள யானை வாகன மண்டபம் தான் இவரது தந்தை கௌரிசங்கர் ஸ்தபதியின் வாகன வேலை செய்யும் பட்டறையாக இருந்தது. இப்பட்டறையில் இவரது தாத்தா **முத்து சுவாமி ஸ்தபதியும்**, சித்தப்பா **கண்ணன்** எனும் இராமநாத ஸ்தபதியும் வாகனவேலை செய்து வந்தனர். முத்து சுவாமி ஸ்தபதி செய்த வெள்ளி யானை வாகனம்

Koviloor Digital Library

அப்போது நூதன முறையில் அமைக்கப்பட்டுள்ளது. அழகிய வேலைப்பாடுகளுடன் அமைந்த அவ்யானையின் காதுகளும் துதிக்கையும் ஆடும்படியாக அமைக்கப்பட்டிருந்தது பார்ப்பதற்கு மிகவும் கம்பீரமாக இருந்தது. கௌரிசங்கர் ஸ்தபதி செய்த துஜஸ்தம்பம், பலிபீடம் தங்கத்தால் செய்யப்பட்டிருந்தன. இவ்வேலைகள் தந்தை கௌரிசங்கர் ஸ்தபதிக்கு புகழை கொண்டு சேர்த்தன. இதன் பின்னர் சமயபுரம் மாரியம்மன் கோவிலுக்காக சூர்ய்பிரபை, சந்திரபிரபை, கற்பக விருட்சம் போன்ற வாகனங்கள் பல செய்தார். ஸ்ரீரங்கம் துஜஸ்தம்பம், பலிபீடம் போன்ற வேலைகளின் சிற்ப நேர்த்தியை வியந்து ரசித்த ஹோ & ஹோ கம்பெனியினரும், தேவஸ்தானத்தினரும் சேர்ந்து **சிற்பகலாநிதி** என்கிற பட்டத்தை வழங்கி சிறப்பித்தனர். மேலும் **வீரகண்டாமணி** என்கிற தங்கத்தாலான **தோடா** வளையம் கையில் அணிவித்து கௌரவித்தனர். அவ்விழாவில் எம்பார் விஜயராகவாச்சாரியார் ஹ்ரிகதா காலட்சேபம் செய்தார். இந்நிகழ்ச்சி பால்யர் வித்யாஷங்கர் மனதில் ஆழப்பதிந்தது. தாமும் தந்தையாரைப் போல் கலாவிற்பன்னராக வேண்டும் என்ற ஆர்வங் கொண்டார். அதிலிருந்து தம் தந்தையாரிடமிருந்து மரபார்ந்த சிற்ப வழியை அறிவதில் மிகுந்த ஆர்வங் காட்டினார்.

Koviloor Digital Library

1957

சென்னையில் வசித்து வந்த தாத்தா முத்துசாமி ஸ்தபதி சென்னை கேசவப் பெருமாள் கோவில் ரிஷபவாகன வேலை செய்து கொண்டிருக்கும் போது பாரிச வாயுவினால் உடல்நிலை பாதிக்கப்பட்டு வாகன வேலை தொடரமுடியாமல் இருந்தது. அப்போது தன் மகனான கௌரி சங்கர் ஸ்தபதி அவ் வேலையை பூர்த்தி செய்ததோடல்லாமல் மிகச் சிறப்ப நேர்த்தி வாய்ந்த வாகனமாக அதைச் செய்தார். இதனால் தந்தை கௌரிசங்கர் ஸ்தபதியின் புகழ் பரவியது. இத்தருணத்தில் பள்ளி இறுதி வகுப்பில் தோல்வியுற்ற வித்யாஷங்கரை அப்போது **'பொம்மைக் கல்லூரி'** என்றழைக்கப்படும் ஓவிய கைத்திறன் பள்ளியில் சிற்ப வகுப்பில் சேர்த்தார். அப்போது பள்ளியின் முதல்வராக திரு கே.சி.எஸ், பணிக்கர் அவர்களும் மற்றும் ஆர்.கிருஷ்ணாராவ், எஸ்.தனபால், எல்.முனுசாமி, ஏ.பி.சந்தானராஜ், போன்றோர்களும் ஆசிரியர்களாக இருந்தனர். தனது ஆசிரியராக இருந்த தனபால் அவர்களிடம்தான் வித்யாஷங்கர் முழு உருவச்சிலை, அரை உருவச் சிலை, மார்பளவுச் சிலை போல்வனவும் உருவச் சிதைப்பு முறைகளும் (distortion), கட்டமைப்பு முறைகளும் (composition techniques) கற்றுக் கொண்டார். மூன்றாண்டுகள் படித்து முடித்த பிறகு

Koviloor Digital Library

சிற்பக்கலை டிப்ளமா சான்றிதழ் பெற்றார் வித்யா சங்கர்.

1963

மாணவனாய் இருக்கும் போதே களிமண்ணால் ஆன மார்பளவு உயிர் ஓவியச் சிற்பங்கள் பல செய்தார் வித்யாசங்கர். இவை உயிர்துடிப்புடன் காணப்பட்டன. பின்னர் **தாயும் சேயும்** எனும் கற்சிற்பம் செய்தார். இச்சிற்பம் தாயையும் சேயையும் நூதனமான வழியில் செதுக்கப்பட்டிருந்தது. நவீனக்கலையில் தன்னை ஈடுபடுத்தி கொண்டதின் ஆரம்ப காலம் என்று இவற்றைச் சொல்லலாம். செம்புப் புடைப்பிலும் **தாயும் சேயும்** சிற்பமொன்று செய்தார். இதில் தாயும் சேயும் நீட்டிக்கப்பட்ட புடைப்புச் சிற்பமாக தோன்றியது. இவ்வகையில் **பானை ஏந்திய பெண்** எனும் செம்புப்புடைப்புச் சிற்பமும் நீட்டிக்கப்பட்ட (elongated) உருவமாக அமைந்தது. அண்ணாமலை கப்பல் கார்பரேஷன் இச்சிற்பத்தை தங்கள் அரிய சேர்ப்பிற்காக எடுத்துக்கொண்டனர். பின்னர் செய்த **குமுறி அழும் பெண்** என்ற தகட்டுப் புடைப்புச் சிற்ப வரிசை செய்தார். இவற்றில் ஒன்று தமிழ் நாடு ஓவிய நுண்கலைக் குழுவின் விருதினைப் பெற்றது. மற்றொன்றினை டெல்லி லலிதகலா அகதெமியினர் தங்களது அரிய சேர்ப்பிற்காக வாங்கிக் கொண்டனர்.

Koviloor Digital Library

1968

இவ்வாண்டுகளில் வித்யாசங்கர் ஸ்தபதியின் கவனம் கிராமியக் கலைகளில் திரும்பியது. அப்போது **பாம்பாட்டி. தேவதா, கௌமாரம்** போன்ற செம்புத்தகட்டுப் புடைப்புச் சிற்பங்கள் செய்தார். இவை கிராமிய வழியிலான அமைப்பிலும் சற்று நவீனமாகவும் அமைந்திருந்தது. தன் வம்சாவளியில் வந்த திரு நடேச ஸ்தபதியாரின் பேத்தியும், திரு கோவிந்தசாமி ஸ்தபதியார் மகளுமான இராஜ ராஜேஸ்வரியை இவ்வாண்டில் திருமணம் செய்தார். இவர்களது திருமணம் தங்கள் பூர்வீக ஊரான ஸ்வாமிமலை திருத்தலத்தில் நடந்தது.

1974

இவ்வாண்டில் **இந்தியத்தாய்** எனும் புடைப்புச் சிற்பம் செய்தார். இச்சிற்பம் நவீன அமைப்பில் அமைந்திருந்தது. **பைரவர்** எனும் புடைப்புச் சிற்பம் கண்கள் பிதுக்கப்பட்ட கிராமிய வழியிலான சிற்பமாக்கப்பட்டிருந்தது. இச்சிற்பம் முகத்தில் நல்ல வெளிப்பாட்டையும் மரபார்ந்த விக்ரக அமைப்பு வழியையும் கொண்டிருந்தது.

1976

இரண்யவதம் எனும் செம்புத்தகட்டுச் சிற்பம் இரண்யனின் உக்ர வெளிப்பாட்டை அப்படியே

Koviloor Digital Library

கொண்டிருந்தது. அங்கங்கே மெல்லிய கம்பிகளா லான கோடுகளால் இரண்யனின் முகபாவ உக்ர வெளிப்பாட்டை இவரால் கொண்டு வர முடிந்தது. இவ்வாண்டில் வித்யாசங்கர் ஸ்தபதி செய்த **கிராம தேவதை** எனும் சிற்பம் வெள்ளிமுலாம் பூசப்பட்ட அழகிய புடைப்புச் சிற்பமாகும். இத்தேவதையில் ஆறு கைகள், ஸ்தனங்கள், இரண்டுகிளிகள் போன்ற வற்றை அமைத்திருந்த விதம் நவீனமாகவும், கிரா மியமாகவும் அமைந்தது. இக்காலம் இவர் கிரா மிய வழியின் முழுமையை காட்டும் காலமாகும். இவ்வாண்டிலேயே செய்யப்பட்ட **இராவணன்** எனும் செம்புத் தகட்டுப் புடைப்புச் சிற்பம் தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழுவின் விருதினைப் பெற்றது. இராவணின் பத்து தலைகள் அமைக்கப்பட்டிருந்த விதத்தில் நவீனம் தோன்றச் செய்தார் இவர். இவ்வகையில் **வேணுகோபாலா, இரதிதேவி** போன்ற சிற்பங்களும் செய்தார். பின்னர் **கௌமாரசக்ரா, வினாயகர்** எனும் இரண்டு உலோகத்தகட்டுப் புடைப்புச் சிற்பங்கள் செய்தார் இவர்.

1985

யுவதி எனும் சிற்பவரிசையை இவ்வாண்டில் தொடங் கினார். செம்பாலும் வெண்கலத்தாலும் செய் யப்பட்ட இச்சிற்பங்கள் உட்கார்ந்து காலை நீட்டிய நிலையிலும், சாய்ந்த நிலையிலும், நின்ற நிலையிலும்

Koviloor Digital Library

அமைக்கப்பட்டிருந்தன. இவை புடைப்புச் சிற்பங்கள் போலல்லாமல் முப்பரிமாணம் கொண்டு திகழ்ந்தன. தலைப்பகுதியும், பாதங்களும், கைகளும் வார்க்கப் பட்ட வெண்கல பாகங்களாக அமைந்தன. இவ் வகைச் சிற்பவரிசை வித்யாசங்கர் ஸ்தபதிக்கு புகழைக் கொண்டு சேர்த்தன. பல்வேறு சிற்பமுகாம் களில் **இவ்யுவதி** சிற்பங்களைச் செய்தார். பின்னர் சுடுமண்ணிலும் இவ்யுவதி சிற்பங்களைச் செய்தார். முகத்தில் சாந்தம் திகழும்பெண், ஆனந்தத்தில் குதூகளிக்கும் பெண், பெரிய ஸ்தனபாகங்கள் கொண்ட பெண், ஒயிலாக அமர்ந்திருக்கும் பெண் என்று பல்வேறு பாவங்கள் கொண்ட யெளவனப் பெண் வடிவங்களை வடித்தார் இவர்.

1988

இவ்வாண்டில் இவரது புகழ்பெற்ற **மிதுனா** சிற்பவரிசைத் தொடங்கியது. ஆண் பெண் சயன னத்தை இச்சிற்பம் குறித்தது. இரண்டு உருவங்கள் அதிலும் சயனித்த நிலையில் செய்யப்பட்ட இச்சிற் பம் பல்வேறு தேசிய அளவிலான காட்சிகளில் வைக் கப்பட்டது. ஆண் பெண் இருதலைகளும் கால்களும் விக்ரகத் துண்டுகளாக இருப்பினும் மற்ற பகுதிகள் புடைக்கப்பட்டிருந்தது. **சுகாசினி** எனும் சிற்ப வரிசை இவ்வாண்டுகளில் இருந்து தொடங்கியது. இப்பெண்

Koviloor Digital Library

தன் வாலிபக் கனவுகளை அசைபோட்டவளாய் படுத்திருக்கிறாள். தூங்கியும், தூங்காமலும் சற்று ஒருக்களித்துப்படுத்திருக்கும் இப்பெண் யௌவன பொலிவுடன் காண்பது காண்போரை கவர்ச்சிக்கக் கூடியதாகும். தற்போது மேஜிக் ரியலிச கூறுகளை தன் சிற்பங்களில் சேர்க்க விரும்பும் வித்யாசங்கர் ஸ்தபதி அதற்காக தீவிரத்தில் இறங்கியுள்ளார். ஊஞ்சலில் ஆடும் இப்பெண்ணுக்கு தலை, கால்கள், கைகள் மட்டும் இருக்கும் மற்ற பாகங்கள் இருப்பது போல் மாயத் தோற்றம் கொள்ளும். கண்ணாடியில் முகம் பார்க்கும் பெண், கதவு அருகில் தலையை விட்டு வெளியே பார்க்கும்பெண் இப்படி ஒருவகை யான மேஜிக் ரியலிசத் தன்மையுடன் கூடிய சிற்பங் கள் செய்வதில் சிற்பி வித்யா சங்கர்ஸ்தபதி ஆர்வங் காட்டி வருகிறார். கும்பகோணம்ஓவியக் கலைக் கல்லூரியில் சிற்பத் துணை விரிவுரையாளராக வேலைப்பார்த்து வரும் இவருக்கு, இராஜமாதங்கி, இராஜசியமளா, என்ற இரு பெண்களும் இராஜ ரவிசங்கர் என்ற மகனுடன் வாழ்ந்து வருகின்றார். முகவரி; சுவாமிமலை மெயின்ரோடு, மேலக்காவேரி, கும்பகோணம்-612002.

Koviloor Digital Library

வித்யாசங்கர் ஸ்தபதி . எழுதிவைத்துள்ள சிற்பத்திற்கான பல்வேறு குறிப்புகள்

சுகாசினி

சுகாசினி என்பதன் பொருள், ஒரு ஆனந்தமான சுகத்தைக் கொடுக்கக் கூடிய ஒரு பெண். அவள் தன் எதிர்கால இன்ப உலகத்தை நினைத்துச்கொண்டு தூங்கியும் தூங்காமலும் உடலைஅசைத்துக் கொண்டு இருக்கும் ஒரு பெண். இந்த சிற்பம் பெண் உருவமாகவும் இதன் உடல் நவினமுடைய பால் உணர்வை கொடுக்கக் கூடிய அமைப்பாகவும் உள்ளது. இந்த சிற்பம் தென்இந்தியாவில் படுக்கைக்காக பயன் படுத்தும் பாய், decorative design mat-ல் தலையணையில் சொகுசாகப் படுத்துக் கொண்டு இருப்பதாக சித்தரித்துள்ளேன். இந்த சிற்பத்திற்கு பெண்ணின் தலையை பஞ்சலோகம், ஐம்பொன் என்னும் உலோகத்தால் செய்துள்ளேன். இந்தச் சிற்பத்தின் தலையமைப்பு தென்னிந்திய கலாச்சார முறைப்படி தலை அணிகலன்களையும் அமைத்துள்ளேன். நெத்திச்சுட்டி, சூரியபிறை, சந்திரபிறை, சிகை அலங்கரிப்புகளில் நீண்ட சடை, நாகம் போன்ற ஜடை சித்தரித்துள்ளேன். ஒரு கை தொடையிலும், மறுகை தலையிலும் அமைத்து உள்ளேன்.

Koviloor Digital Library

கோயில் வளர்த்த கலைகள்

இயல், இசை, நாடகம், நாட்டியம், முதலிய கலைகளை வளர்த்து மாணவ, மாணவிகளுக்கு அறிவு வளர்ச்சிப் பண்ணையாக பாரதம் பூராவும் பரவி இருக்கிறது கோயில்கள். மேலும் சரித்திர சம்பந்த மான உண்மைச் சாஸனங்களை ஆலய, உடல் முழு தும் கல்வெட்டுகளாகப் பதித்து வரலாற்றை எடுத் தியம்புவது ஆலயம். தர்மம், மருத்துவம் அன்ன தானம், முதலிய அறத்துறைகளை வளர்த்து நமக்கு அளிப்பது ஆலயம். உலகம் பூராவும் உள்ள யாத்திரி கர்களை வரவேற்று தனது எழிலை அவர்களுக்கு போதித்து இருக்குமிடமாக அவர்களது உள்ளத் தையே தேர்ந்தெடுத்துக் கொள்கிறது. நகர பொது மக்களை ஒன்று கூட்டிப் பேசவும், அக்கால நீதிகளை நிலை நிறுத்தவும், வசதியற்ற ஏழைக் குடும்ப தம்பதி களுக்கு திருமண மாளிகையாகவும் தன்னை அர்ப் பணித்துத் தருகிறது ஆலயம். மொழிப்பேதம் இல் லாமல் சர்வமத சம்மதமாக ஒன்று சேர்த்து வைப் பது ஆலயம். நல்லார்க்கும், பொல்லார்க்கும் எல் லார்க்கும் பொது இடமாக இருப்பது, உயர்வு, தாழ்வு அற்ற சமரச மனப்பான்மையை வளர்த்துத் தருவது ஆலயம். பல்லாண்டு காவியங்களையும், ஓவி யங்களையும், சிற்பக்கலைகளையும் இசைநாதங்களை

 யும் காத்துத் தருவது ஆலயம். சமயப் பெரியோர்

Koviloor Digital Library

மங்கை
கோட்டோவியம்
இந்தியன் இங்க்

Koviloor Digital Library



Koviloor Digital Library

களால் அருள்பெற்ற ஆன்றோர்களையும் உருவாக அமைத்து 63 நாயன்மார்களையும், 13 ஆழ்வார் களையும், சிலையாக சமைத்து காத்துவருகிறது. முக்திக்கு வித்தான பக்தியை வளர்த்து ஆண்டவருடைய அருள் தன்மையை கதாகாலஷேப மூலம் மக்களுக்கு எடுத்துக் கூறி தன்வயம் ஆக்குவது ஆலயம். கலிலியோ தோன்றுவதற்கு பல் ஆண்டுக்கு முன்பு உலகம் உருண்டையாகத் தான் இருக்கிறது என்பதை நிர்ணயித்தும், மணிகாட்டும் கருவிகளுக்கு முன் சிற்பம் காட்டுத் துரும்பு எடுத்து கண்டம் 16 ஆக்கி நீட்டி நின்றதுவே நாழிகையாம் என்றபடிநாளை நாழிகையாக்கி நமக்கு அளித்தது ஆலயம். அணு தோன்றுவதற்கு முன்தோன்றி சூரியஒளியில் அணுவை கண்டுபிடித்து அணுவிலிருந்து அங்குலம் அடியாக பெருக்கி தந்துள்ளது சிற்பம்.

கோவில்களில் பிரும்ம உற்சவங்களில் வாகனங்களில் திரு உருவை வைத்து அலங்காரம் செய்து உலா வருவதில் பெரிய தத்துவம் அடங்கியுள்ளது. நால் வகை யோனியில் எழுவகைத் தோற்றங்களாக உண்டாகிய விந்தையே நாம் பார்க்கும் சூரிய சந்திரனிலிருந்து ஊர்வன, பறப்பன, நடப்பன போன்றவை என வாகனங்கள் மூலம் நமக்கு இன்றும் நினைவு படுத்துகிறார்கள். முக்கியமாக கடவுள் பக்தியானது நம் மக்களிடை எத்தனை துயரம் வளர்ச்சியடைந்

Koviloor Digital Library

துள்ளது என்பதை ரதோற்சவம் திருத்தேர் விழாவில் தர்மகர்த்தாக்கள் அறிந்து பக்தி செழிக்க ஆவன செய்வார்கள். திருத்தேர் விழாவிலும், கோயில்பெரு விழாவிலும் மக்களின் சமரச மனப்பான்மையை பக்தியை நிதானமாக காணலாம்.

ஆலயத்தில் இல்லறத்தான் முதல் ஞானிகள் வரை வாசி தத்துவத்தை அறியும் பொருட்டு மூலா தாரம் முதல் சகஸ்ராரம் வரை எப்படி வலமாக **குண்டலினி** சக்தி சிகரத்தை அடைகிறது என்பதை, மனிதனின் முதுகுத் தண்டுபோன்ற கொடி மரத்தில் கொடியேற்று விழாவின் தத்துவத்தை பிரம்மோற்சவ காலத்தில் காணலாம். எத்தனையோ ராத்திரிகள் வந்து போனாலும் ஒன்பது ராத்திரிக்கு தனிச் சிறப்பு உண்டு. அதை நவராத்திரி என்பார்கள். ஆன்மீக விஷயத்தில் பக்தியில் பராசக்தியானவள் ஒன்பது இரவும் அவள்செய்தவிந்தைகளைக் கூறி சிவனே என சிவனும் மல்லாந்து படுத்துவிடுகிறான். பராசக்தியின் பாதம் சிவன்மீது படவும் அவருடைய உக்ர சுபா வத்தை இழுத்துக்கொண்டு சக்தியின் தத்துவத்தை உலகறியச் செய்தாள். 365 நாளில் பத்துநாள் நீங்க ளாக மற்ற 355 நாட்கள் சிற்ப தொழிலாளருக்கு ஓய்வின்றி ஓயாது உழைத்த ஆயுதங்களுக்கு அதை உபயோகப்படுத்திய சிற்பிகளுக்கும் திருவிழா போன் றது நவராத்திரி. அக்காலத்தில் ஒவ்வொரு சாம்

Koviloor Digital Library

ராஜ்ய முறைப்படி கலாச்சாரத்தை தழுவிய கலை கள் சிற்ப உருவமாக்கப்படுகின்றன. அந்தந்த நாட்டு கலைகளையும் அந்தந்த சாம்ராஜ்யத்தின் கலைத் திற மைகளை அறியும் பொருட்டும்மன்னர்கள்அரண்மனை களிலும் பிரபுக்கள்மாளிகைகளிலும் கொலுஅமைத்து பொதுமக்கள் பார்வைக்கும் அலங்கரித்து வைத்தார் கள். இந்தகலை நாட்டுக்கு நாடு பரவி விரிவு அடை கிறது.பத்தாம் நாள் விஜயதசமி தினம் கலைஞர்களை பாராட்டிபொன்னாடை போர்த்தி மலர்மாலைசூட்டி சிற்ப கலைஞர்களை மகிழ்விப்பார்கள். இதுவேகலை தெய்வத்தின் மகிமையும் கலைஞர்களுடைய திறமை யையும் போற்ற காரணமாக இருக்கிறது. இத்தனை கலைகளையும், 64 கலைகளையும் கோயில்கள்காத்து தருவதோடு,இந்திரால நாதங்களையும்எத்தனையோ விதமான வாத்தியக் கருவிகளையும் அன்று முதல் இன்று வரை வளர்த்து காப்பாற்றி நமக்கு அளித்துள் ளன நம் கோயில்கள். இவ்வாறு 6 சாஸ்திரங்களும், 96 தத்துவங்களும் நான்கு வேதங்களும் பேணிப்பாது காக்கப்பட்டு மனிதனும் காம, குரோத, லோப, மோக,மத, மாச்சரியங்கள் என்கிற 6 இழி குணங் களைமாற்றி மனிதனை மனிதனாக வாழ வழி வகுத்துதந்துள்ளது ஆலயம் எனப்படும் கோயில்களே.

சங்கீதம்

பக்தியில் வளர்ந்த நாடு பாரதத் திருநாடு. பக்தி

Koviloor Digital Library

பலவகையில் கொண்டாடப்பட்டாலும் கீதம் மிக விரைவில் மக்கள் மனதை ஈர்த்து விடும். நமது சாஸ்திரம் கடவுளை வணங்க நான்கு பாதங்களாக வகுத்துள்ளது. ஞான, யோக கிரியை, சரியை என்று ஆகமம் 4 பாதங்களாகப் பேசுகிறது. இதில் ஞான பாதத்தில் பக்தி பாடல்களைப் பாடி மக்கள் மனதை ஒரு நிலைப்படுத்தி இசையமைப்பதே கீதம். சங்கீதத்திற்கு பிரணவ நாதத்திற்கு ச்ருதியே ஆதாரமானது. அந்த ஆதாரத்திற்குள் அகர, வகர மகரம் மூன்றும் சேர்ந்து விஷ்ணு, பிரம்ம, ருத்ர' ஸ்வருபம் என்று பேசுகிறது. அதில் ஓங்கார நாதம் ஒலிக்கிறது. சதுர வேதங்களில் சாமவேதத்திலிருந்து கானம் பிறந்தது என்று ஆன்றோர் கூறுவர். இங்கு 4 வேதங்களை மட்டும் பேசவில்லை. ருக், யஜீர், ஸாம, அதர்வன ப்ரணவ எனும் பஞ்ச வேதங்களில் பிரணவ வேதமே முதன்மை ஆனது. இந்த ப்ரணவ வேத ஆதார ச்ருதியிலிருந்து ருக், யஜீர், ஸாம, அதர்வண வேதங்கள் கோஷிக்கப்படுகின்றன. எனவே பிரணவத்தை மறந்துவிடக்கூடாது. பாட்டின் பொருள் விளங்காதவர்களையும் இசை தன்வயப்படுத்தி ஒருநிலைப் படுத்துகிறது.

கீதத்தால் மழை பொழியும், காற்றுவீசும், கனல் உண்டாகும் ஏன்? பஞ்ச பூதங்கள் நாத வித்தையில்

Koviloor Digital Library

கட்டுப்படும். பாம்பு கீதத்திலயிக்கும். பசுக்களும் ஏராளமான பால் கறக்கும். பயிர் விளையும். லஸ் வரமான கீதத்தால் திருக்கயிலாயத்தையே ஆட்டிப் படைத்த ராவணேசுவரன் சரிதம் நம் நினைவிற்கு வருகிறது அல்லவா! நாம் குழந்தையாய் இருந்த போது தொட்டிலில் இட்டு தாலாட்டும் கீதம் கேட்டே கண் அயர்ந்து தூங்கி விடுகிறோம். அசைக்க முடியாத பளுவை இசைகீதம் அசைத்து தூக்கி விடுகிறது. நாம் உண்ணும் உணவும் உரலில் இட்டு இடிக்கும் போது இசைபாடி உமி நீக்கப்படுவ தால் அந்த உணவே நம்மை கீதத்தில் ஆழ்த்துகிறது. இப்படிப் பலப்பல ஒப்புயர்வற்ற காரியங்களை எல்லாம் இசை செய்கிறது.

கீதம் ஆண்டவன் ரூபம். ஸ்தபதிகளின் உல்லத் தில் ஆண்டவன் உறைந்து கிடப்பதால் அவர்களுக்கு கீதம் உடலோடு பிறந்தது. கல்உளியின் மேல் சுத்தி யால் தட்டும் போது எழும் நாதத்தை ஆதார சுருதி யாக வைத்து கீதம்பாடி சிற்பத் திரு உருவம் முழுமை பெருகிறது.

வினாயகர் பற்றிய குறிப்புகள்

இந்தியாவில் தோன்றிய சமயங்கள் ஆறு வகையா கும். சைவம், வைஷ்ணவம், காணாபத்யம், சாக்தேயம்

Koviloor Digital Library

மங்கை

கோட்டோவியம்

இந்தியன் இங்க்



Koviloor Digital Library

கௌமாரம், சௌவுரம் எனப்படும். சைவம் சிவத்தைதயும், வைஷ்ணவம் விஷ்ணுவையும் கணாபத்யம் வினாயகரைப் பற்றியும் சாக்தேயம் தேவியைப்பற்றியும் கௌமாரம் குமரனை மற்றும் சௌவுரம் சூரியனைப் பற்றியும் கூறப்படுவது.இப்படி அறுவகை சமயங்களில் எல்லா சமயங்களும் வினாயகரை பற்றிய காணாபத்யம் பொதுவாக எல்லோராலும் அனுஷ்டிக்கப்பட்டுவருகிறது. வினாயகர் என்றால் வி நாயகர், நாயகனில் தலைவனாக உள்ளவன் என்று பொருள்படும். இதுமட்டுமா! வினாயகர் என்கிற பொருளில் வினா என்கிற கேள்விக்கு விடை அளிக்கின்ற நாயகன் எனவே மக்களுக்கு நன்மை தீமை என்கிற இரண்டு இறப்பு, பிறப்பு இரண்டிலும் இரண்டறக் கலக்க செய்கின்ற காரியம் விக்கனம் இல்லாமல் வெற்றி பெற நாம் வணங்கிவருவது கண்கூடாக அனுபவத்தில் யாவரும் அறிந்த உண்மையே. அகில பாரம் முழுவதும் இந்த வினாயக சதுர்த்தியை மிகச் சிறப்பாகவும் பயபக்தியுடனும் சிரத்தையாகவும் செய்து வருகிறார்கள். மற்ற சமயங்கள் யாவும் பாரதம் முழுவதும் பரவி இருந்தாலும் அனேகமாக குஜராத்தியர்கள் பம்பாய் முதலிய மாகாணங்களில் சதுர்த்தியை சிறப்பாக கொண்டாடுகிறார்கள். அங்கே இன்றும் காணா பத்யம் என்கிற சமயத்தை கடை பிடித்து வருவதே மகிழ்ச்சிக்கு உரியது. பௌத்த

Koviloor Digital Library

மதமும் ஜைனமதமும், பேதாபேதமின்றி வினாய கரை கொண்டாடி வருகிறார்கள். மெய்யன்பர்களே நமது பாரத சமுதாயத்திலே பஞ்சபூதங்களாகிய பிருதிவி, அப்பு,தேயு, வாயு, ஆகாசம், என்கிற பஞ்ச பூதங்களை நாம் இன்று வணங்கிவருகிறோம். ஆனால் அவை எப்பொழுது எந்த எந்த காலங்களில் எந்த காலங்களில் எந்த மாதங்களில் திதி, நஷ்த் திரம் செய்து வருகிறோம் என்பதை நாம் உணராமலேயே அனுஷ்டித்து வருகிறோம். கார ணம் யாதெனில் நம்முடைய மூதாதையர்கள் அனுஷ்டித்து வந்த பூஜை முறைகளையும் தெய்வ வழிபாட்டு முறைகளையும் செய்துவருகிறோம். ஆகையால் இந்தெந்த பூஜை செய்துவருகிறோம் என்பது அறியவில்லை. அதாவது பிருதிவி-என்றால் மண், என்று பொருள்படும், உமி என்றும் கூறுவார் கள். இதற்கு முதல் முதலாக ஆவணி மாதம் வரை பிறை சதுர்தியில் மண்ணுக்கு பூஜை என்பதை ஆன் றோர்கள் வகுத்துள்ளனர். ஆகையால் மண்ணுக்கு பூஜை செய்கிறோம். சாதாரணமாக மண்ணை வைத்து பூஜையரையில் வழிபாடு செய்வார்களா? செய்யமாட்டார்கள். எனவே மண்ணுக்கு பூஜையை பிருதியளவும் சமமாகிய வினாயகரை களி மண்ணில் செய்து பக்ஷண பலகார வகைகளை முறையேவைத்து

 வணங்கி வருகிறோம். ஏனென்றால் உலகத்தில்

Koviloor Digital Library

தோன்றிய ஜீவன்கள் எல்லாம் முடிவில் மண்ணோடு ஆகிவிடுகிறது. இதேபோல் அப்புவாகிய ஜலத்திற்கு மாதம்18நாளில் கொண்டாடுகிறோம். அதை கன்னியர்களும் சுமங்கலிகளும் வணங்கிவருவதை கண் கூடாக காண்கிறோம்.

தேயு: அக்னி என்பது நெருப்புக்கு பூஜை, கார்த்திகை மாதம் பௌர்ணமியில் கார்த்திகை தீபம் என்ற அக்னிக்கு பூஜை செய்கிறோம்.

வாயு: இதை காற்று என்பார்கள். காற்றில்லாமல் மனிதன் வாழவே முடியாது. மனிதனுக்கு முக்கியமானவை காற்று (சுவாசம்.)இதை சித்தர்கள் "தூங்கையிலே வாசி சுழி மாறிபோனாலும் போச்சு" என்று பாடியுள்ளார்கள். எனவே சுவாச.சக்தி பிராணன் கண்ணுக்குத் தெரியாமல் வாயு ரூபமாக இருப்பதால் இதை மாசி மாதம் அமாவாசை தினம் சிவராத்திரி என்று கொண்டாடுகிறோம். பிராணன் சிவனுடையது. சிவானுகிரகத்தால்தான் நாம் உயிருடன் வாழ முடிகிறது என்பதை சிவராத்திரி என்று பூஜை வாயுவிற் பூஜை செய்கிறோம்.

ஆகாசம்: ஆகாசம் என்றால் பரவெளி. ஆகாசத்திற்கு பூஜை, தைமாதம் முதல் தேதி சூரியன் மகர ராசியில் பிரவேசிக்கின்ற தினத்தில் மகர சங்கராந்தி

Koviloor Digital Library

என்கிற பொங்கல் பெருவிழாவை கொண்டாடு கிறோம். மனிதன் சுகமாக வாழ்வதற்காகவே மண், காற்று, நெருப்பு தண்ணீர் ஆகாசம் ஆகிய ஐந்து பூதங்களின் உதவியால் நிலம் விளைகிறது. அதற்கு தண்ணீர் வேண்டும். நல்ல காற்று தேவைப்படுகிறது. சூரிய உஷ்ணம் பயிர்கள் பூமியிலிருந்து மேலோங்க காரணமாகயிருக்கிறது. ஆகாசத்தின் உதவியால் அமைந்துள்ளது. எனவே இவ்வைதீதின் உதவியால் மனிதனும் மற்ற தாவரம் முதல் சகல ஜீவராசிகளும் ஜீவிக்கின்றன. சுருங்கக் கூறின் அண்டகம், சுவேத கம், உட்பீடம் சரோபிம் என நால்வகையோரில் எழு வகை தோற்றங்களாய் 84 லட்சம் ஜீவராசிகளாக அனேகபேத ஜீவோற்பத்தி உண்டாவதற்கு காரண மாக பஞ்ச பூதங்களும் அமைந்துள்ளது.

தோடுடைய செவியன், விடையேரியோன் தூவெண் மதி சூடி காடுடைய சுடரைப் பொடிபூசி உள்ளம் கவர் கள்வன் என்கிறஞானசம்பந்தர் பதிகப்படி - இடதுபாகமாகிய சக்தி பாகத்தில் தோடும் வலது பாகமாகி சிவன் பாகத்தில் குண்டலமும் அணிந்து தூய்மை வெண்மை நிறமுள்ள காளையின் மீது தூய்மையான பிறை சந்திரனை அணிந்து சாம்பல் திருமேனியில் முழுவதும் பூசியுள்ள சிவபெருமானா கிய பரமேஸ்வரனிடம் வெளியில் கூற முடியாத விஷயங்களையும் சொல்ல முடியாத எண்ணங்களையும்

Koviloor Digital Library

அறிந்து அவனை தன்வயப்படுத்திக் கொள்கிறார். உதாரணமாக ஒரு திருடன் கன்னம் வைப்பதற்காக பிரார்த்தனை செய்கிறான்.

பக்திசுலப்பன் என்றும் வினாயகரை கூறுவார்கள். அவரை வணங்கினால் எளிதில் பெற்றுவிடலாம் என்று பொருள்படுகிறது. உதாரணமாக அவ்வையார் அரச ரிடம் முத்தமிழை பெற லெகுவாக கணபதியிடம் பெறுகிறார் என்றால் வேண்டியதை வேண்டிய படியே எண்ணியதை எண்ணியபடியே சிறப்புடன் கொடுக்க வல்லவர். பாலும் தெளி தேனும் பாகும் பருப்பும் இவைநாலும் கலந்து உனக்கு நான் தரு வேன் கோலம் செய், துங்ககரிமுகத்து தூமணியே நீ எனக்கு சங்கத்தமிழ் மூன்றும் தா, கோலம் செய்; அழகிய யானைமுகக் கடவுளே! குஞ்சரம் முத்தனே தூமணியேபளிங்கு போன்ற தூய்மையான வெண்மையான உள்ளம் படைத்தவனே, எனக்கு அருள் செய், நான் உனக்கு நான்கு தருகிறேன். நீ எனக்கு ஒன்று குறைவாக மூன்றும் தா என்று கேட் டால் அதாவது பாலும் தெளிந்த தேனும் பாகும் பருப்பும் ஆகியநாலையும் உனக்குகலந்து தருகிறேன் அவை மிகவும் ருசியாகயிருக்கும்எனவே நீயினிமிகுந்த செந்தமிழாக இயல், இசை நாடகம் ஆகிய முத்த மிழை எனக்கு கொடு என்று கேட்டு மிகவும் லாவக

Koviloor Digital Library

விநாயகர்
இந்தியன் இங்க்
1981

Koviloor Digital Library

மாக பெற்றுவிட்டார். ஸ்ருஷ்டி: உலகோற்பத்தி ஜீவ உற்பத்தி.

ஸ்திதி: காப்பாத்துவது

சம்காரம்: அழிப்பது

திகோர்த்தாரம்: மீண்டும் அழித்ததை உற்பத்தி செய்வது

அனுக்கிரகம்: ரட்சிப்பது
முறையே ஐந்து கரங்களும் இந்த ஐந்து தத்துவத்தை.

பாசம்: ஆசையும், மாயையும்

அங்குசம்: தண்டனை செய்வதையும்
சம்காரம் செய்வதையும்

தந்தம்: தன்னுடைய வலது தந்தத்தை உடைத்துவலது கரத்தில் வைத்து திகோர்தாரம் என்றும் புணர் உற்பத்தி அளிக்கிறார்.

ஸ்ருதி: மோதம், கஸ்தம் உணவினால் தான் ஜீவிக்க முடியும் ஜீவன்கள் என்பதை மோதகங்தத்தில் வைத் துள்ளனர்.

துதிக்கையால் அனுக்கிரகம் செய்கிறார்.

புவளம் ஆகுற வயிறிற்க்கு ஐந்து கசங்களாகிய ஐந்து தொழில்களையும் அமைத்து பிரமாணமாகிய தலை

Koviloor Digital Library

யில் சுவாசமாகிற பிராணனை (காற்று) தன்னிடத்தே அமைந்துக்கொண்டு இருப்பதே விநாயக தத்துவம்.

லெக்ஷ்மி லக்ஷணம்

லெக்ஷ்மி தேவியானவள் பத்மாஸானத்தில் உட்கார்ந்திருப்பாள். இரண்டு கைகளும் பொன்நிற மேனியுமுடையவள். காதில் கற்கள் பதித்த பொன்னால் ஆனநகையணிந்திருப்பாள். நல்ல யௌவணமான பருவம் அழகிய அங்க அமைப்பும் வளைந்த புருவமும், அழகு நிறைந்த விலாஸமும் உடையவள். சிவந்த கண்களும் பருத்த சதைப்பற்றுள்ள கன்னங்களும் ரவிக்கையணிந்த வதனங்களுடையவள். தலை அணியும், முன்தலையின் இருபக்கங்களிலும் அணியும் சங்கு, சக்கர வடிவமான நெத்திச் சுட்டியும் உடையவள். வலது கையில் தாமரை மலரும் இடதுகையில் வில்வப்பழமும் வைத்திருப்பாள். அழகிய இடுப்பு, பிருஷ்டபாகம்,அழகிய வஸ்திராலங்காசமும், ஒட்டியாணம், அனுசநூல், மாலையணிந்து, சகல ஆபரணமும் அலங்கரிக்கப்பட்டும் இருப்பாள்.

கோபிகிருஷ்ணன்
கோட்டோவியம்
இந்தியன் இங்க்

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

வண்ணங்கள் பற்றிய சிற்பியின் குறிப்புகள்

வெளுப்பு சிவப்பு மஞ்சள் கருப்பு

ஜலத்திலிருந்து —வெளுப்பு
அக்னியிலிருந்து—சிவப்பு
பூமியிலிருந்து —மஞ்சள்
காற்றிலிருந்து —கருப்பு
விஷ்ணு —வெளுப்பு
மகேஸ்வரன் —சிவப்பு
உருத்திரன் —கருப்பு
கௌரிதேவி — மஞ்சள்
பிராமணன் —வெளுப்பு
ஷத்திரியன் —சிவப்பு
வைகியன் —மஞ்சள்
சூத்திரன் — கருப்பு

ஒவ்வொன்றும் 4 விதமாகும்

கருப்பு—4
நீலம் —மேகம்
சியாமம்—காட்டுக்காக்கை நிறம்
காலம் —மயில்கழுத்து
கிருஷ்ணன்—கருங்குயில்

$4 \times 4 = 16$ வீதம் கலர்

Koviloor Digital Library

கருப்பு நீலம் சமமாக கலந்தால் கேசவர்ணம்.
பயிர்பச்சை, சிவப்பு —1:1—மஞ்சிப்னட வர்ணம்
கருப்பு, மஞ்சள் — 1:1 மது (தேன்) வர்ணம்
கருப்பு, மஞ்சள் — 1:2 — மானுஷ (மனித) வர்ணம்

கருப்பு மஞ்சள், சிவப்பு— 1:2:1 — மஞ்சள் வர்ணம்.

இதில் குறைந்த அளவுடன் கலந்தால் பஹூலா சம் எனப்படும். அதிக அளவு சேர்த்தால் அல்பலா சம். இது (ஸௌதாகர்மாவு உரியதாகும்)

வெள்ளை ½+கருப்பு+சிவப்பு—மத்ஸ்ய வர்ணம்
கருப்பு 1, சிவப்பு 2 — காஷாயவர்ணம்
வெளுப்பு 1, மஞ்சள் 2 — பிங்களவர்ணம்
வெளுப்பு 1, மஞ்சள் 3—செங்கழுநீர்ப்பு வர்ணம் (கல்ஹாச)
கருப்பு 1, மஞ்சள் 2 — ஜலவர்ணம் (இதுவே மனிதவர்ணம்).
கருப்பு 1, மஞ்சள் 1 — மானுச வர்ணம்.
சிவப்பு 1 (அரிதாரம்) கருப்பு 1 — கிளிப்பச்சை
இதில் மஞ்சள் 2 பங்கு சேர்த்தால் தாறியாங்குசம் (பயிர்முளை வர்ணம்)

கருப்பு 1,½ பங்கு மஞ்சள் (அரிதாரம்) பங்கு சிவப்பு, சேர்த்தால் பயிர்பச்சை வர்ணம்.

 கருப்பு 1, நீலம் 1 சேர்த்தால் கேசவர்ணம்.

Koviloor Digital Library

வெளுப்பு+சிவப்பு— 1:1 — கௌரவர்ணம்

வெளுப்பு+மஞ்சள்—1:1 — கற்புர வர்ணம்

வெளுப்பு+கருப்பு— 1:1 — தும்ர வர்ணம்

வெளுப்பு+கருப்பு+சிவப்பு
+மஞ்சள் 1:1:1— ஸார வர்ணம்

வெளுப்பு+சிவப்பு+கருப்பு
+மஞ்சள் 1:1:1 — மிரீரத வர்ணம்

சிவப்பு+மஞ்சள் — 1:1 — மகிழம்பூ வர்ணம்

மஞ்சள்+சிவப்பு — 1:2 — அதிரக்தவர்ணம்

இது ஜ்வலநச்சவி என்றும் அக்னிவர்ணம். இது ஒரே சம அளவு கலந்தாலும் இதே வர்ணமாகும். சிவப்பு 1, கருப்பு 2 குளவர்ணம் (வெல்லம்). மஞ்சள் ஒரு பங்கும், சிவப்பு பங்தும் இது கபிலர் வர்ணம். வெளுப்பு 1, சிவப்பு[1] இது கர்பூரவர்ணம். இதுவே நீலம் அதிகம் சேர்த்தால் பயிர்முனை வர்ணம். பச்சையில் 1, சரிபாதி அரிதாரம் அதில் சரிபாதி குங்குமம் (குஸ்குஸ்டம்) அது பயிர்பச்சை வர்ணம்.

கருப்பு + லாஷாஸாம் — 1:1 — ஜம்பு நாவல் பழம் ஜாதீபலமும் (லிங்கம்) லாஹாஸாரமும்—1:1— லோஹிதவர்ணம்.

Koviloor Digital Library

கோட்டோவியங்களும்
வரைகோட்டோவியங்களும்
SKETCHES
AND
DRAWINGS

Koviloor Digital Library

மங்கை

கோட்டோவியம்

1988



Koviloor Digital Library

மங்கை

வரைக்கோட்டோவியம்

1987

Koviloor Digital Library

வரை கோட்டோவியம்
1980
இந்தியன் இங்க்

Koviloor Digital Library

மங்கை
1980
இந்தியன் இங்க்



Koviloor Digital Library

வேணுகோபாலா
1980
கோட்டோவியம்

Koviloor Digital Library

பாம்பாட்டி
கோட்டோவியம்
1967

Koviloor Digital Library

வரைகோட்டோவியம்

இந்தியன் இங்க்

1980



Koviloor Digital Library

அரையர் அலங்காரம்

வரைகோட்டோவியம்

1989



Koviloor Digital Library

வரை கோட்டோவியம்
இந்தியன் இங்க்
1983

Koviloor Digital Library

வீரன்
கோட்டோவியம்
1978

Koviloor Digital Library

சயன மங்கை
கோட்டோவியம்
1989

Koviloor Digital Library

Koviloor Digital Library

வரைகோட்டோவியம்
இந்தியன் இங்க்
1979

Koviloor Digital Library

மங்கை
கோட்டோவியம்
1978



Koviloor Digital Library

காளிங்க கிருஷ்ணன்
கோட்டோவியம்
1987



Koviloor Digital Library

இரண்யவதம்
கோட்டோவியம்
1978



Koviloor Digital Library

கோட்டோவியம்
இந்தியன் இங்க்
1969



Koviloor Digital Library

வேணுகோபாலன்
கோட்டோவியம்
1981



Koviloor Digital Library

மங்கை

இந்தியன் இங்க்

1975

Koviloor Digital Library

கோட்டோவியம்
1980
இந்தியன் இங்க்

Koviloor Digital Library

மான்கள்
கோட்டோவியம்
1980



Koviloor Digital Library

ஐயனார்
கோட்டோவியம்
1976

Koviloor Digital Library

கோட்டோவியம்
1980
இந்தியன் இங்க்



Koviloor Digital Library

சிற்பியின் சிறப்புக் குறிப்புகள்
கையெழுத்துப் பிரதிகள்

Koviloor Digital Library

லக்ஷ்மி லக்ஷணம் பற்றிய குறிப்புகள்

லக்ஷ்மி லக்ஷணம்

ப.

லக்ஷ்மி தேவியானவள் பத்மாஸனத்தில் உட்கார்ந்திருப்பாள்.
இரண்டு கைகளிலும் பொற்கலசங்களை யுடையவள். மற்றிரு கரங்கள் பதித்த பொற்கமலங்களை யணிந்திருப்பாள்.
நல்ல வெண்மையான பட்டும் அழகிய அங்க அமைப்பும் வளர்ந்த புருவமும், அழகு நிறைந்த நாஸியும், உடையவள். பெருத்த கண்களும், பவழ (ஜொலிக்கும்) கன்னங்களும், ரத்னம் அணிந்த ஸ்தனங்களையுடையவள்.
தலை அணியும் பொன் தாலியும் இரத்தினங்களிலும் அணியும் சங்கசக்கர வடிவமான நெற்றிச் சுட்டியும் உடையவள்.
வலது கையால் தாமரை மலரும் இடது கையால் வில்வப்பழமும் வைத்திருப்பவள். அழகிய இடுப்பு, பருத்த பிருஷ்டபாகம். அழகிய வஸ்திராலங்காரமும் உடையவளாக, அதனால், பூவை அணிந்து சகல ஆபரணங்களும் அலங்கரிக்கப்பட்டும் இருப்பாள்.

சுபம்

Koviloor Digital Library

வண்ணக் கலவை பற்றிய குறிப்புகள்

[illegible] வெள்ளை . சிவப்பு மஞ்சள் கறுப்பு

கிருதயுகத்துக்கு - வெள்ளை
திரேதாயுகத்துக்கு . சிவப்பு
துவாபரயுகத்துக்கு . மஞ்சள்
கலியுகத்துக்கு — கறுப்பு.

பால் — வெள்ளை
செம்பவளம் — சிவப்பு
[illegible] — கறுப்பு
கோமேதகம் — மஞ்சள்.

பிராமணர்க்கு - வெள்ளை
க்ஷத்திரியர் — சிவப்பு
வைசியர் — ~~கறுப்பு~~ மஞ்சள்
சூத்திரர் — கறுப்பு.

ஒவ்வொன்றும் 4 பிரிவுகளை,

கறுப்பு — 4

1. நீலம் — மேகம்.
2. சியாமம் (~~[illegible]~~) ~~[illegible]~~ கருங்குவளைப் பூ
3. [illegible] — மயில் கழுத்து.
4. கிருஷ்ணம் - கருங்குயில்.

4 x 4 = 16 நிறங்கள்.

Koviloor Digital Library

குதிரை

வரைகோட்டோவியம்

இந்தியன் இங்க்

Koviloor Digital Library

கறுப்பு 1, மஞ்சள் 2 = மாதுளு (மஞ்சு வர்ணம்)
கறுப்பு 1, மஞ்சள் 2, சிவப்பு சேர்த்தால் (மாநிற) மஞ்சள் வர்ணம்.
இதோடு இதால் வெள்ளைத்த அரையுடன் கலந்தால்
பழுமாநிறம் ஏற்படும்
அதிக அரை சேர்த்தால் அல் பமாநிறம்
இது (ஸாதாரணமாய் உபயோகிக்கலாம்)

வெள்ளை + $\frac{1}{2}$ கறுப்பு + $\frac{1}{4}$ சிவப்பு = மங்கிய வர்ணம்.

கறுப்பு 1 சிவப்பு 2 = கஷாய வர்ணம்.
வெள்ளை 1 மஞ்சள் 2 = பங்கமா வர்ணம்.
வெள்ளை 1 மஞ்சள் 3 = தைலக் கொழுப்பு வர்ணம்
(கல்யாண)
கறுப்பு 1 மஞ்சள் 2 = ஜலவர்ணம் ~~இலை~~ குழைவேம்பு வர்ணமாகும்.
கறுப்பு 1 மஞ்சள் 1 = மாதுளு வர்ணம்.
அரிதாரம் (சிவப்பு) கறுப்பு 1:1 கிளிப்பச்சை.
இதில் மஞ்சள் 2 சேர்த்தால் தாம்ரயாஸ்ரு.
(பொன்பூண் வர்ணம்)
கறுப்பு அரைதில் $\frac{1}{2}$ பங்கு அரிதாரம் (மஞ்சள்) $\frac{1}{4}$ பங்கு
சிவப்பு (இலங்கை) சேர்த்தால் பாசிபச்சை.
கறுப்பு 1 நீலம் 1 சேர்த்தால் மேக வர்ணம்

வெடியுப்பு + கிலுப்பு — 1:1 — [illegible] — தெளிவாகும்.

வெடியுப்பு + மஞ்சள் — 1:1 — கறுப்பாகும்.

,, + கடிப்பு — 1:1 — தாம்பரவாகும்

வெடியுப்பு + கடிப்பு + (கிலுப்பு) (மஞ்சள்) 1:1:1/:1 நாகவாகும்

வெடியுப்பு + கிலுப்பு + (கடிப்பு) மஞ்சள் 1:1:1 · மிஞ்சும் வாகும்

கிலுப்பு + மஞ்சள் = 1:1 வெளிறல், மஞ்சளாகும்

மஞ்சள் 1 கிலுப்பு 2 = அடர் நீலமாகும்

கிரு. [illegible] அதிர்வாகும்.

கிரு. [illegible] இதுவாகுமவை

[illegible] (மஞ்சள்) கடிப்பு 2 = [illegible] வாகும் (வெள்ளை)

மஞ்சள் 1 பங்கு கிலுப்பு ½ [illegible] வாகும்

வெடியுப்பு 1 கிலுப்பு ¼ கறுப்பாகும்

[illegible] அடர் [illegible] பச்சை வாகும்

பச்சை (green) 1 [illegible] அடர்

[illegible] (கிலுப்பு)

[illegible] வாகும்

கடிப்பு + நாகம் 1:1 [illegible]

[illegible] (வெள்ளை) [illegible]

[illegible] — [illegible] வாகும்.

கடிப்பு [illegible] வாகும்

[illegible], கிலுப்பு [illegible] வாகும்

கடிப்பு + மஞ்சள் 1:1 = [illegible] வாகும்.

Koviloor Digital Library

COLLECTIONS
AWARDS
EXIBITIONS

Koviloor Digital Library

Born

6th June 1938, Karur, Trichy District. S. INDIA. First class Diploma in fine Arts, sculpture. First class Diploma in crafts, sheet metal Govt. college of Arts and crafts, Madras, Professional Sculpture in the Swamimalai Tradition. SOUTH INDIA.

Exhibitions participated.

Regularly exhibiting at National exhibition of arts Madras, Bombay, calcutta and Lucknow, Delhi, All India Art Exhibition of A.I.F.A.C.S. (Delhi) - 1977. All India Sculpture forum of India Exhibition Delhi, Guntur 1976, and Chandigarh 1977.

25 years of Indian Art Organised by the Lailt kala Acadmy, New Delhi 1972.

Travelling exhibition of Lalit kala Academy collection 1972-73 1987-88

All India Exhibition of Fine Arts, Karnataka 1988. Mysore Dasara Industrial and cultural Exhibition.

1971 - 73.

 All India Exhibition of Fine Arts Bhuvaneswar-1987.

Koviloor Digital Library

Participated Miniature Bronze sculpture camp at Bangalore, chitra Kala Parisath, 1987.

Participated Terracotta Sculpture camp at Kumbakonam sponsored by Lalit Kala Academy, Madras - 1988.

Participated in All India Artist camp at Bhuvaneswar - 1989.

Awards/Prizes

Ceramic Exhibition 1961

Madras Art club Exhibition 1963

Madras State Lalit kala Academy Exhibition 1964

Mysore Dasara Industrial cultural Exhibition 1973

Bombay Art Society Annual Exhibition 1976

Tamil Nadu Ovia Nunkalai Kuzhu State Exhibition. 1978, 1985.

Fellowship

Awarded Government of India, Ministry of Human Resource development New Delhi (Culture).

Koviloor Digital Library

Bombay art Society exhibition 1976 - 78.

State Lalit kala Academi - Lucknow - 1977.

Tamil Nadu Ovia Nunkalai Khuzhu's Annual Exhibition of Art - 1964 to 88.

Regional Art Exhibition, Madras - 1989.

Participant in the All India Sculpture campaat Mahabalipuram 1965 sponsored by the Lailt Kal-Acadmy New Delhi.

Participant in All India Sculpture camp at Madras - 1979.

Participant in All India Sculpture camp at Bangalore (Karnataka) 1980.

Participant in All India Sculpture camp at Tamil University. Tanjore 83.

Participant in All India Techno-Art camp at Visveswairaya Museum, Bangalore - 1982.

Participant in South Zone Cultural centre Arists camp, organised by Lalit Kala Akademi Regional centre at Madras - 1987.

Koviloor Digital Library

Collections

National Gallery of Modern Art. New Delhi.

Lalit kala Akademi New Delhi.

State Lalif kala Academy Madras.

(Tamil Nadu ovia Nunkalai Kuzhu Madras)

Museum of Modern Art Gallery Punjab, chandigarh
Museum of Modern Art Gallery Manipur.

In various private collections in India and abroad. Lalit kala Academi National Academy of Art NEW DELHI Regional centre, Madras.

Any other information

At present working as a faculty member in sculpture department, Government college of Arts and crafts, Kumbakonam and General Council member of sculpture forum of India, New Delhi. Member of the Advisory Comittee, Tamilnadu ovia Nunkalai kuzhu. (state Lalit kala Academy Madras).

Koviloor Digital Library

Collection:

Sculpture at Varaganur Anaicut, Sculpture at Madurai University.

Murals on glass upper Anaicnt P.W.D - Trichy, Gandhidarsan Exhibition. New Delhi.

Koviloor Digital Library

சிற்பியின் படைப்புக்கள்

புகைப்படங்கள்

Koviloor Digital Library



சிற்பி
வித்யாசங்கர் ஸ்தபதி

Koviloor Digital Library



பானை ஏந்திய பெண்
செம்புத்தகடு, புடைப்புச் சித்திரம்
1964

Koviloor Digital Library

குமுறல்
செம்புத்தகடு புடைப்புச் சிற்பம்
1965



Koviloor Digital Library

உயிர்ஓவிய சிற்பம்
1963
சுடுமண்

Koviloor Digital Library

உயிர்ஓவிய சிற்பம்
1963
சுடுமண்

Koviloor Digital Library

தாயும் சேயும்
செம்புத்தகடு புடைப்புச்சிற்பம்
1965



Koviloor Digital Library



யுவதி
1965
செம்புத்தகடு புடைப்புச்சிற்பம்

Koviloor Digital Library

குமுறி அழும் பெண்
செம்புத்தகடு புடைப்புச் சிற்பம்
1965

Koviloor Digital Library

தாயும் சேயும்
1965
கற்சிற்பம்

Koviloor Digital Library

இரதிதேவி
1975
செம்புத்தகடு புடைப்புச்சிற்பம்

Koviloor Digital Library

பைரவர்
1975
செம்புத்தகடு புடைப்புச் சிற்பம்

Koviloor Digital Library

வேணு கோபாலா
1977
செம்புத்தகடு புடைப்புச் சிற்பம்



Koviloor Digital Library



பாம்பாட்டி
1968
செம்புத்தகடு புடைப்புச் சிற்பம்

Koviloor Digital Library

இராவணன்
1972
செம்புத்தகடு புடைப்புச் சிற்பம்



Koviloor Digital Library



கௌமாரா
1972
செம்புத்தகடு புடைப்புச்
சிற்பம்

Koviloor Digital Library



கௌமார சக்ரம்
1978
உலோகத்தகடு புடைப்பு
சிற்பம் (Metal foil)

Koviloor Digital Library

விநாயகர்
1977
உலோகத் தகடு புடைப்புச்
சிற்பம்

Koviloor Digital Library

இரண்யவதம்
1976
செம்புத்தகடு புடைப்புச்
சிற்பம்

Koviloor Digital Library

கிராமதேவதை
1976
செம்பு (வெள்ளிமுலாம்
பூசப்பட்ட) சிற்பம்



Koviloor Digital Library

இந்தியத்தாய்
1974
செம்புத்தகடு புடைப்புச்
சிற்பம்



Koviloor Digital Library

தேவதை

செம்புத்தகடு புடைப்புச்
சிற்பம்

1972

Koviloor Digital Library

வைஷ்ணவம்
செம்புத்தகடு புடைப்புச்
சிற்பத்துடன்
சிற்பி வித்யாசங்கர் ஸ்தபதி
1980

Koviloor Digital Library

கற்பகவிருட்சம்

1982

செம்புத்தகடு (வெள்ளி
முலாம் பூசிய) சிற்பம்

Koviloor Digital Library

உயிர்ஓவியச் சிற்பம்
1980
சுடுமண்



Koviloor Digital Library

உயிர் ஓவியச் சிற்பம்
(பக்கவாட்டுத் தோற்றம்)

Koviloor Digital Library

சிற்பம் செய்யும்
வித்யாசங்கர் ஸ்தபதி
1985

Koviloor Digital Library

யுவதி
1988
சுடுமண் சிற்பம்

Koviloor Digital Library

யுவதி

பின்புறம் தோற்றம்

Koviloor Digital Library

யுவதி
நேர்முக தோற்றம்

Koviloor Digital Library

யுவதி
1985
செம்புவெண்கலச்
சிற்பம்

Koviloor Digital Library

யுவதி

1987

செம்புவெண்கலச்
சிற்பம்



Koviloor Digital Library

மங்கை
வெண்கலச் சிற்பம்
1988

Koviloor Digital Library

மங்கை

பின்பக்கத் தோற்றம்

Koviloor Digital Library

மங்கை
சுடுமண் சிற்பத்துடன்
சிற்பி வித்யாசங்கர் ஸ்தபதி

Koviloor Digital Library

மங்கை
வெண்கலச் சிற்பம்
1988



Koviloor Digital Library



சுகாசினி
1989
செம்பு வெண்கலச்
சிற்பம்

Koviloor Digital Library

சுகாசினி
(நேர்த்தோற்றம்



Koviloor Digital Library

மிதுனா
செம்பு வெண்கலச்சிற்பம்
1988

Koviloor Digital Library

சுகாசினி
சிற்பத்துடன் சிற்பி
வித்யாசங்கர் ஸ்தபதி

Koviloor Digital Library



மிதுனா
செம்பு வெண்கலச்
சிற்பம்
1989

KOVILOOR MADALAYAM
KOVILOOR - 630 307
(NEAR) KARAIKUDI
(PHONE: -436846)

Koviloor Digital Library

மிதுனா
(நேர்முகத்தோற்றம்)

Koviloor Digital Library



மிதுனா
செம்பு வெண்கலச்
சிற்பம்
1989

ச. மெய்யப்பன்
அறக்கட்டளை

Koviloor Digital Library

Koviloor Digital Library

வித்யாலங்கார்
ஸ்தபதியின்
சிற்ப மொழி

தெவைசா